www.padippakam.com

வியர்

தொகுதி : 5 இலக்கம் : 3

"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பெண்

தொகுதி - 05 இல - 03
2000

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு

படிப்பகம்

www.padippakam.com

பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின்
சஞ்சிகை
46/02, பழையவாடிவீட்டுத் தெரு
மட்டக்களப்பு

THE WOMAN - A Journal Published By
Suriya Women's Development Centre,
46/2, Old Rest House Road,
Batticaloa

கௌரவ ஆசிரியர் - வாசுகி ஜெயசங்கர்

முன் அட்டையில் - மட்டக்களப்பில் பெண்களால் நெசவு துவாய்
நன்றி-தொழிற்துறை திணைக்களம், மட்டக்களப்பு

கணனி வடிவமைப்பு - இ. கணேஷதேவி (சூ.பெ.அ.நி)

அச்சகம் - சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம் மட்டக்களப்பு

விலை - ரூபா 30/=

படிப்பகம்

www.padippakam.com

வாசகர்களுடன்........

பெண்ணிலைவாதம் என்பது பெண்களது விடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டது அல்ல. எல்லாப் பாகுபாடுகளுக்கும் அடிப்படையான, பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையிலான சமத்துவமின்மையை, பால்நிலைப்பட்ட பாகுபாட்டை, நீக்குவதன் மூலம் ஒரு கௌரவமான சமத்துவமான சமுதாயத்தை உருவாக்குவதை நோக்காகக் கொண்டது.

சமூகங்களில் ஆதிக்கத்தில் உள்ளவர்களாக இருந்தாலென்ன, அடக்கப்படுவோராக இருந்தாலென்ன, அவர்களுக்குள் தாழ்நிலையில் வைக்கப்படுவோர் பெண்களாகவே இருக்கின்றனர். இவ்வாறு பாரபட்சங்கள் நிலவும் காரணத்தால் இருதரப்பினரும் நிறைய அழுத்தங்களை அனுபவிக்க வேண்டியிருப்பினும், அடக்கப்படுவோராகவும், அதிகமாக வன்முறைக்குட்படுத்தப்படுவோராகவும், ஆளுமைகளை வெளிப்படுத்த முடியாது பாதிப்படைவோராகவும் பெண்களே இருக்கின்றனர்

எனவே, சமூக விடுதலை, மானுடவிடுதலை என்பது அடிப்படையில் பெண் விடுதலையிலிருந்தே தொடங்க வேண்டும். இதையே பெண்நிலைவாதம் நோக்காகக் கொண்டுள்ளது. பெண்நிலைவாதிகள் இதனைக் கருத்தியல் ரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் பெண்களது நிலைநின்று முன்னெடுக்கின்றனர்.

சமூக விடுதலைக்காக சிந்திக்கும் ஆண்கள் பலரும் கூட இவ்வாறான மாற்றங்களுக்காக, பால்நிலையடிப்படையிலான பாகுபாடுகளற்ற சமூகவிடுதலையைப் பற்றி சிந்திக்கின்றனர், செயற்படுகின்றனர். ஆயினும் பெண்ணிலைவாதம் என்ற விடயத்தைக் கருத்தில் கொள்வதே தம்மை மாற்றுவதற்கும் தாம் மாற வேண்டிய தேவையையும் உருவாக்கும் என்ற காரணத்தால் பலர் அதை தீண்டத்தகாத விடயமாக வைத்திருக்க விரும்புகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

ஆண்கள் இப்பாகுபாட்டின் காரணமாக அவர்களிற்கு கிடைக்கும் அதிகாரத்தை, அந்தஸ்தையும், வசதிகளையும், இழப்பதற்குத் தயங்குகின்றனர். இப்பாகுபாட்டை நிலைநிறுத்துவதற்காகவும், தொடர்ந்தும் இரண்டாம்பட்ச நிலையில் பெண்களை வைத்திருப்பதற்காக அவர்களுக்கு தூண்டில் இரை போல் வழங்கப்படும் "நல்ல பெண்மணி" என்கின்ற பெயரையும் கௌரவத்தையும் இழக்கப் பெண்கள் பயப்படுகின்றனர்

பொதுவாக சமூகத்தில் பால்நிலை வேறுபாடுகள் கருத்தியல் ரீதியாகவும், செயற்பாடுகளூடும், இறுக்கப்பட்டுள்ள காரணத்தால், அதாவது அரசு, மதம், கல்வி, சட்டம், இலக்கியங்கள், தொடர்பு ஊடகங்கள் போன்ற நிறுவனங்களுடாக திட்டமிடப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ள காரணத்தால் அநேகர் இதில் மாற்றங்களைப் பற்றி சிந்திக்கவே அச்சப்படுகின்றனர். இதுவே பெண்ணிலைவாதிகள் மீது பலரும் கொண்டுள்ள அச்சத்திற்கான காரணமுமாகும்

இத்தகைய அச்சங்களைத் தவிர்க்கவும், சமூகங்களில் பெண்களது நிலையை, பெண்களது ஆளுமைகளை வெளிப்படுத்தவுமான பல்வேறு செயற்திட்டங்களுள் ஒன்றாகவே நாங்கள் பெண் சஞ்சிகையை வெளியிடுகிறோம்.

இவ்வகையில் இந்த இதழில் மட்டக்களப்பில் பெண்ணிலைவாதச் செயற்பாடுகளைப் பற்றியும் அதன் மீதான சமூகப்பார்வை பற்றியும், ஜெகநாதன் என்பவரது கட்டுரை உட்பட இலங்கை, இந்தியச் சமூகச் சூழலில் பெண்நிலை சார்ந்த பல்வேறு விடயங்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

கருத்துக்களை வரவேற்கிறோம்

-ஆசிரியர்-

படிப்பகம்

www.padippakam.com

திருமண நிச்சயிப்புக்களில் பெண்கள்

சுதாஜினி

எமது புராதன வாழ்வை ஆராயும் மானிடவியலாளர்கள் திருமணம் என்பதை மனித இனம் தமது பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறை என்கின்றனர். இது ஒரு அடிப்படை எண்ணக்கருவாக அவர்களால் கொள்ளப்படினும் திருமணம் என்பது வெறுமனே பாலியல் தேவையினை தீர்ப்பதற்கான ஓர் ஏற்பாடல்ல. அவ்வாறாயின் திருமணத்திற்கு ஆண், பெண் என்ற அடிப்படை அந்தஸ்துகளே போதுமானது. ஆனால் இருவர் திருமணம் செய்துகொள்ள முனைகையில் இணைந்து வாழ்வதற்கான அடித்தளங்கள், இரு குடும்பங்களின் இணைவு, அதன் சாத்தியப்பாடு. பொருளாதார அடித்தளங்கள், முரணற்ற சிந்தனைப்போக்கு என்பவற்றை கருத்தில் கொள்கின்றனர்.

முன்னைய திருமணங்களில் பல்வேறு முறைகளில், தமக்குரிய மணத்துணையை தேடினர்.

1. தகுதிகாண் திருமணம் *(Probationary Marriage)*
   இம்முறையில் ஒருவன் தான் விரும்பும் பெண்வீட்டில் பல மாதங்கள் தங்கியிருந்து அனைத்து வகையான பொருளாதார செயற்பாடுகளிலும் ஈடுபட்டு திருமணம் செய்துகொள்ளல்.

2. கடத்தல் மணம் *(Marriage by Capture)*
   ஒருவன் தான்விரும்பும் பெண்ணை மணம்புரியத் தடை ஏற்படின் கடத்திச் சென்று மணம்புரிதல்.

3. தேர்வுத் திருமணம் *(Marriage by Trial)*
   இது விழாக்களில் நடைபெறும் ஒருவகைப் போட்டியில் தமது திறனை வெளிப்படுத்தும் ஒருவன் தனக்குப் பிடித்த பெண்ணை மணம்புரிதல்.

படிப்பகம்

www.padippakam.com

4. மணப்பெண் வீட்டிற்குப்பணம் கொடுத்தல்

(*Marriage by Purchase*)

மணமகன் வீட்டார் மணப்பெண் வீட்டாருக்குப் பணம் கொடுத்து அப்பெண்ணை தமக்குரிதாக்கல்

5. பரிமாற்றத் திருமணம் (*Marriage by Exchange*)

மணமகன் தன் மணத்துணையை வேற்றுக் குடும்பத்திலிருந்து பெறுகையில், தன் சகோதரியை அல்லது தன் குடும்பத்துக்கு நெருக்கமான பெண்ணையே அதற்கு ஈடாக அக்குடும்பத்துக்கு அனுப்பிவைத்தல்

6. உடன்போக்குத் திருமணம் (*Marriage by Elopment*)

மணமக்கள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு காதலர்களாக வாழும்போது திருமணத்திற்கு ஏதும் தடை ஏற்படின் வெளி இடத்திற்கு ஓடிச்சென்று மணம்புரிதல்

7. வலிய மணம் (*Marriage By Intrusion*)

ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பிய பின்பு அவன் அவளை மணக்க மறுத்தோ அல்லது தடைகளை ஏற்படுத்தி காலம் தாழ்த்தினாலோ மணமகளே வலியவந்து மணமகன் வீட்டிற்கு சென்று குடும்பம் நடத்தல்

8, மணக்கொடை (*Marriage by Dowry*)

மணப்பெண்வீட்டார் மணமகன் வீட்டாருக்கு பெருந்தொகைப்பணம், பொருள் கொடுத்து திருமணம் செய்துவைத்தல்

மேற்கூறப்பட்ட திருமணமுறைகளில் சில தற்போதும் நடைமுறையிலுள்ளதை அவதானிக்க முடிகிறது. இன்று நடைமுறையிலுள்ள முறைகளில் ஆதிக்கம் செலுத்துபவர்கள் ஆண்களாகவேயுள்ளனர். பெண்கள் வெறும் பொம்மைகளாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். இத்திருமண முறைகளில் ஒரு ஆண் தான் விரும்பும் பெண்ணை மணம் செய்து கொள்வதற்கான முறைகள் இருந்துள்ளதே ஒழிய பெண்ணினது விருப்பிற்கு முக்கியமளிக்கப்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு ஆண்நிலைசார்ந்து நின்று கட்டமைக்கப்பட்டு விட்ட சமுதாய அமைப்பிற்குள் பெணகள் அடங்கி அல்லது அடக்கப்பட்டு வாழ்ந்ததை காணமுடிகிறது. எமது பண்டைய ,இலக்கியங்களில் வரும் திருமண முறைகளில் கூட இதனை இனம் காணமுடிகிறது.

ஆனால் பெண்கள் கல்வி வளர்ச்சியின் பின்னர் நாட்டின் மனிதவள மேம்பாட்டில் கணிசமான பங்கினை பெண்கள் வகிப்பதுடன் பெருந்தொகையான உற்பத்திச் செயற்பாட்டிலும் ஈடுபடுகின்றனர். இந்நிலையில் பெண்களைக் கைப்பொம் மைகளாக கையாள்வதோ ஒதுக்குவதோ அசாத்தியமான ஒன்று. எனினும் ஏலவே கட்டமைக்கப்பட்டு அதனுள் வளர்ந்தெடுக்கப்பட்ட ஆண்களால் அச்சிந்தனைப் போக்கினை மாற்ற முடியவில்லை. இதிலிருந்து மீள்வது பெண்களிற்கும் பெரும் பிரச்சனையாகவுள்ளது.

இன்றும் ஏதோவோர் வகையில் பெண்கள் மீதான தமது ஆதிக்கத்தினை தக்க வைத்துக்கொள்ள விரும்பும் ஆண்களின் மனப்போக்கினை இன்றைய பேச்சுத் திருமணங்களிற்கென பத்திரிகையில் வெளியாகும் விளம்பரங்களில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. இவற்றுள் பொதுவாக பெண்கள் கொண்டிருக்க வேண்டிய விடயங்களென நோக்குகையில் இன்றளவும் நின்று நிலைப்பதாக, பெண் ஆணை விட

படிப்பகம்

www.padippakam.com

உயரத்தில் குறைவாக இருத்தல், கல்வியில் ஆணைவிட குறைந்த தரத்தினை கொண்டிருத்தல் போன்றவற்றைப் பலரும் இன்றளவும் விரும்புகின்றனர்.

இன்றும் சமூகத்தில் உயர் இடத்தில் வைத்து நோக்கப்படும் கல்வி, பொருளாதாரம் போன்ற விடயங்களால் உண்டாகும் அந்தஸ்து அதிகாரம் ஒருபோதும் பெண்ணிற்கு அமைந்து விடக்கூடாது என்பதில், ஆண்களும்; ஆண்நிலை நோக்குடையோரும் உறுதியாகவுள்ளனர்.மகளுக்கான வரனைத்தேடும் பெற்றோர் தமது மகளைவிட கூடிய வருமானம் பெறும் ஒருவரையே விரும்புகின்றனர். இது ஆணாதிக்க சிந்தனை கொண்ட பெண்வீட்டாரையே இனம் காட்டுகின்றது. மகளை விட அதிக வருமானம் பெறுபவரை தேர்ந்தெடுப்பதையே தமக்கு கௌரவமாக கொள்கின்றனர். வாழ்வினை அல்லது வாழ்க்கை தரத்தினை நிர்ணயிக்கும் பொருளாதாரம் ஆண்களின் கையில் தொடர்ந்து வைத்திருப்பதன் மூலம் தமது அதிகாரத்தினை நின்று நிலைக்க வைக்கின்றனர்.

இவ்வாறான சிந்தனை போக்கு பெண்களை மட்டுமல்ல ஆண்களையும் வெகுவாகப் பாதிக்கின்றது. அவர்கள் சமூகம் வழங்கும் அந்தஸ்திற்கு உரியவராக இருக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகின்றது. ஆண்களிற்கென சமூகம் வலியுறுத்தும் விடயங்களான வீரம், உழைப்பு, ஆளுமை, பொறுப்பு, முற்போக்கு போன்ற விடயங்களை எல்லா ஆண்களும் கொண்டிருக்க வேண்டியுள்ளது. இவை இல்லாத போது ஏளனத்திற்கு உள்ளாகின்றனர். இதனால் இவர்களது வாழ்வும் இவற்றிற்கான போராட்டமாகவே அமைந்து விடுகிறது. மேற்குறித்த விடயங்களை பத்திரிகைகளில் மணமகன்-மணமகள் தேவை விளம்பரங்களில் அவதானிக்கலாம்.

பெண்கள்பற்றிய விளம்பரத்தில் படித்த, சிவந்த, மெல்லிய ஆங்கில அறிவு கொண்ட, கவர்ச்சியான தோற்றமுடைய போன்ற விடயங்களை அழுத்தியே பெண் வீட்டார் தம் பெண்ணை விளம்பரப்படுத்துகின்றனர். ஆண்வீட்டாரது விளம்பரங்களிலும் மணமகள் தேவை என குறிப்பிட்டு மேற்கூறிய விடயங்களை எதிர்பார்ப்பதை அவதானிக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com

முன்பு பெண் என்றால் நற்குணம் கொண்ட குடும்பப்பாங்கான பெண்களையே திருமணத்தின் போது விரும்புவர். இதிலும் குடும்பப்பாங்கான என்ற சொல் கருதும விடயத்திற்கேற்ப விவாதத்திற்குள்ளாகும்.

தற்போதைய விளம்பரங்கள் பெண்களை போகப் பொருளாக்குகின்றன. தொடர்புசாதனங்கள், அதிலும் குறிப்பாக சினிமா தெரிந்தெடுத்துக் காண்பிக்கும் உலகத்தால் ஆக்கிரமிக்கப்பட்டதன் விளைவு, அதனாலுண்டான பண்பாட்டு மாற்றம் அல்லது பிறழ்வு என்பனவே இதற்கு முக்கிய காரணமாகின்றன. அறிவுத்தளத்தில் அல்லது புறவயமாக *(objectivity)* நின்று பார்க்க விளையும் போதும், அதனுள் மூழ்கியே செல்ல வேண்டியுள்ளது. இதனை சினிமா மிக இலகுவாகவே தன் தொழில்நுட்பபலத்தினால் சாதித்து எம்மை மாயவுலகில் மிதக்க விடுகிறது.

மொத்த விளம்பரங்களின் எண்ணிக்கை	சிவந்த அழகிய மெலிந்த இளமை	கல்வி ஆங்கிலம்	சீதனம்	துணையாக மட்டும்
70	50	16	12	09

இரு வார வீரகேசரி விளம்பரங்களின் கணக்குகளில் பெண்கள் பற்றிய எதிரபார்ப்பு மலர்-70, இதழ்-35, 36.

இதன் தாக்கத்திற்குட்பட்ட, தெளிவற்ற ஆண் சமுதாயத்தினால் பெண்கள் வற்றிய எதிர்பார்ப்பும் இதன்விளைவாக உருவாகிறது. இவ்வாறான ஆண்களின் இரசனையை திருப்திப்படுத்த விளையும் பெண்களும், சினிமா காட்டும் மாயவிம்பங்களுக்குத் தம்மை ஈடு கொடுக்க விளைகின்றனர். இது பற்றிய தெளிவு ஆண்களிடம் அல்லது ஆண்நிலைசார் நோக்குடைய சமூகத்தில் வருமளவும், பெண்களும் இதுபற்றிச் சிந்திப்போரும் போராடிக்கொண்டிருக்க வேண்டியிருக்கும். இதனால்தான் பெண்வீட்டாரும் தம்மகளைப் போகப் பொருள் போல விளம்பரப்படுத்துகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

முன்னைய திருமணங்களில் பெண்கள் வீட்டில் இருப்பதனை, அதாவது தொழிலுக்கென வெளியில் செல்லாத பெண்களையே விரும்பினர். ஆனால் தற்போது தொழில் புரியும் பெண்களையே பெரும்பாலானோர் விரும்புவதனை விளம்பரங்களில் அவதானிக்க முடிகிறது. இது எந்த பெண்ணிலைவாத நோக்கிலோ அல்லது முற்போக்குவாத சிந்தனையாலோ எழுந்ததல்ல, மாறாக வருமானம் பெறுவதே அடிப்படை நோக்கமாக அமைகிறது. தனியுழைப்பின் மூலம் நவீன அறிவியல் உலகிற்கு முகம் கொடுக்க முடியாதவிடத்து ஆண்கள் தம் போக்கினை மாற்ற வேண்டியதாயிற்று.

இதிலும் சில சுவாரஸ்யமான விடயங்களும் இடம்பெறுகின்றன. இலத்திரனியல் பொறியியலாளர் (Electronical Engineer) ஒருவரின் பெற்றோர் தம்மகனுக்கு மணமகளாக ஒரு பல்வைத்திய நிபுணரை (Dental surgeon) தேடுகின்றனர் (வீரகேசரி). இங்கு இலத்திரனியல் பொறியியலாளருக்கு ஒரு பல்வைத்தியரை மணமகளாக தேடியதன் காரணமென்ன என ஆராய்ந்து பார்க்கையில் இதற்கான காரணங்களாக

1) உயர் அந்தஸ்தில் வைத்து நோக்கப்படும் உத்தியோகங்களாக பொறியியலாளர், வைத்தியர் இருப்பதனாலும் மகனுக்கு ஒரு வைத்தியரைத் தெரிதல்
2) பல் வைத்தியர் முழுநாளும் வேலை செய்ய வேண்டியதில்லை (பெண் வீட்டு வேலையிலும் ஈடுபட வேண்டும் என்ற சிந்தனை)
3) மகன் இலத்திரனியல் பொறியியலாளர் என்பதால் அதற்கு சமனாக பெண் ஒரு M.B.B.S ஆக இருக்கக்கூடாது.

இங்கு தெளிவாகும் உண்மைகள் என்னவெனில் இன்றைய சமூகம் வருமானம் பெறும் நோக்குடனும், கௌரவத்தின் நிமித்தமும் உயர் தொழில் புரியும் பெண்களைத் தேடிய போதும், ஆண்களுக்கு சமனான பதவிகளில் பெணகள் இருக்கலாம் ஆனால் நிச்சயமாக ஆண்களிலும் உயர் பதவிகளில் இருக்கக்கூடாது என்ற நோக்கத்தில் உறுதியாக இருக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com

விளம்பரம் செய்யும் போதே இவ்வாறான ஆதிக்க சிந்தனை கொணடிருப்பவர்கள் திருமணத்தின் பின்னான வாழ்விலும் எல்லாவகையிலும் மனைவி அல்லது மருமகளின் ஆற்றலைக் குறைத்து, வீட்டுச்சுமைகளைத் தாங்கும் பெண்ணாகவே நிலைப்படுத்த விரும்புவர்,

பெண்கள் உரிமை பற்றிய விழிப்புணர்வு சமூகத்தில் ஏற்படுத்தப்படுகின்ற போதும், கற்றோர் மத்தியில் இவை கவனிக்கப்படுவது போல் இருந்தாலும் பெண்ணடிமைத்தனம் மறைமுகமாக செயற்பட்டுக்கொண்டே உள்ளது. இது பற்றிய தெளிவும், நினைந்து கருதி தம்போக்கினை மாற்றும் தன்மையும் ஆண்களிடமும் ஆண்நிலைசார் நோககுடையோரிடமும் ஏற்படும் வரை பெண்களின் திருமணமும், அதற்குப் பின்னான வாழ்வு மாத்திரமல்ல, அதற்கு முன்னான வாழ்விலும் பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இப் பிரச்சனைகளை தீர்ப்பதான போராட்டமாகவே அவர்கள் வாழ்வும் முடிந்து போக, பெண்களின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு இடமிருக்காது.

எனவே இது பற்றிய பிரக்ஞையும் அதன் வழிவந்த செயற்பாடும் மிக அவசியமானதும், அவசரமானதுமான ஒன்றாகியுள்ளது

உசாத்துணை

1. பண்பாட்டு மானிடவியல்-பக்தவத்சல் பாரதி.
2. ஜெ. வாசுகியின் களப்பயிற்சி 1, களப்பயிற்சி 2
3. வீரகேசரி-மலர் -70 இதழ்-35,36 -வார வெளியீடு
4. எது நல்ல சினிமா-எஸ்.தேவபிக்சை

படிப்பகம்

www.padippakam.com

ஜமீலா நிஷத்:
என் இதயத்தில் துயில்கிறது ஒரு கவிதை

இந்தியாவின் ஹைதராபாத்தைச் சேர்ந்த கவிஞர் ஜமீலா நிஷத் அவர்களின் நான்கு கவிதைகள் இங்கு மொழிபெயர்த்துத் தரப்படுகின்றன. "என் இதையத்தில் துயில்கிறது ஒரு கவிதை" என்ற ஜமீலா நிஷத் அவர்களின் கவிதைத் தொகுப்பிலிருந்து அவை எடுக்கப் பட்டிருக்கின்றன. உருது மூலத்தில் இருந்து பேராசிரியர் ஷிராயுடினும் ஹோஷாங் மேர்ச்சன்றும் ஆங்கிலத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

சிட்டுக்குருவி (SPARROW) என்ற பெயரிலான பெண்கள் பற்றிய ஆய்விற்கான ஒலிநாடா மற்றும் ஒளிப்படங்களிற்கான ஆவணக் காப்பகத்தினர் ஜமீலா நிஷத் அவர்களின் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டிருக்கின்றனர். குப்பைக் குவியல்களுக்குள் குறுணிகளைத் தேடியுண்ணும் சிட்டுக் குருவிபோல், ஆண்களின் ஆவணங்களாகக் குவிந்து கிடக்கின்ற தகவல் குவியல்களுக்குள் மறைந்து கிடக்கும் பெண்களது வாழ்க்கை, அவர்களது வாய்மொழி வரலாறுகள், மொழிகள், என்பவற்றைத் தேடித் தொகுக்கும், ஆய்வுகளை முன்னெடுககும் இயக்கமாகச் சிட்டுக்குருவி இயங்கி வருகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

சிட்டுக்குருவி இயக்கத்தின 11வது வெளியீடாக ஜனவரி 1999ல் மேற்படி கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டிருக்கின்றது. இத்தொகுப்பின் முன்னுரையை மேற்படி அமைப்பின் இயக்குனரான கலாநிதி சி.எஸ்லக்ஷ்மி (எழுத்தாளர் அம்பை) எழுதியிருக்கின்றார். அதன் சாரம்சம் இங்கே தரப்படுகின்றது.

ஜமீலா நிஷத் ஒரு கவிஞர். கனவுப் படிமங்களாக வண்ணங்களில், வகைவகையான வடிவங்களில் தமக்குக் கவிதைகள் வருவதாக அவர் சொல்கின்றார். இதைப் புரிந்துகொள்வது சாத்தியமானது, ஏனெனில் அவரது கவிதைகளில் ஒரு கனவுத் தன்மையான இயல்பினைக் கண்டுகொள்ள முடியும் கடந்த சில வருடங்களாக முஸ்லிம் அடையாளம் சம்பந்தமான விடயங்களை ஜமிலா அணுகி வருகின்றார். இது 1992ன் பின்னர் தன்மீது திணிக்கப்பட்டதாகக் கூறுகின்றார்.

நட்புறவு, பகிர்தல், கோயிலுக்குப் போதல், விழாக்களில் மகிழ்தல் என்ற சூழலில் வளர்ந்த கவிஞருக்கு ஹைதராபாத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான வெறுப்புணர்வு, பகைமை என்பவற்றை ஏற்றுக்கொள்வது இயலாதது ஆகியிருக்கின்றது. இந்த விஷச் சூழலை மாற்ற முயல்வதே கலைஞர் என்ற வகையில் அவரின் நோக்கமாகி இருக்கின்றது

பெண்மீது திணிக்கப்பட்டிருக்கின்ற பலவகையான அழுத்தங்களை, கட்டுப்பாடுகளை, வளர்ந்து வந்த சூழலில் அவதானித்த ஜமீலா, முஸ்லிம் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குவதற்கும், நம்பிக்கையையும் பலத்தையும் ஏற்படுத்துவதற்கும் முனைப்புடன் இயங்கி வருபவர். முஸ்லிம் பெண்களை, அவர்களுடைய பிரச்சினைகளைப் பேசவும், அவர்களுடைய வேதனைகளைத் தன்னுடன் பகிர்ந்து கொள்ளவும் தொடர்ச்சியாக ஊக்குவித்து வருபவர்.

ஜமீலா, உருது மொழியில் பயிற்சி பெற்றவராக இருப்பதால் அவர் அம்மொழியிலேயே எழுதுகின்றார். ஏனெனில் உருது ஒரு மொழியாகத் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என அவர் உணர்கிறார். அதே நேரம் பெண்களது பேச்சு மொழியாக இருக்கின்ற *தாக்கானி* மொழிக்கு அங்கீகாரத்தையும், ஏற்புடைமையையும் பெற்றுக் கொடுப்பது மிகவும் தேவையானதொன்று என்றும் ஜமீலா உணர்கின்றார். *தாக்கானி* மொழியில் தனது நாடகங்களை எழுதுவதன் மூலம் ஜமீலா அதனைச் செய்கின்றார்.

படிப்பகம்

www.padippakam.com

நிஷத் என்பதன் அர்த்தம் மகிழ்ச்சி. ஆனால் ஜமீலா நிஷத் கவிதைகளில் துயரத்தின் சாயலையே காண முடியும் ஆனால் அவை ஏன் அவ்வாறு இருக்கின்றன என்று அறியாதிருக்கின்றார் ஜமீலா. அந்த வகையில்தான் ஜமீலா அவற்றைக் கனவு காண்கின்றார். அதனால்தான் அவர் எழுதுகின்றார்.

.... என் உடம்பின் சமுத்திர விளிம்பில்
என் முகத்தின் கழுவிய களியில்
இரண்டு கண்கள்
பிரகாசிக்கின்றன
பார்க்கின்றன,
என் கனவுகளின் பூக்களை எண்ணி
அவற்றை மணலில் பதிக்கிறது
கடற்கரையில் அலைபவர்கள்
அக்கறையற்றவர்கள்
அழியாமல் அவற்றில் மிதித்துக்
கடக்கிறார்கள்

ஆச்சரியமான கனவுகளின் சொந்தக்காரியான ஜமீலா நிஷத்தின் கவிதைகளுக்கு இது முகப்பு வாசலாக இருக்கும்

- *சி.ஜெயசங்கர்* -

படிப்பகம்

www.padippakam.com

நிலைத்தவொரு புள்ளிநான்
பிரபஞ்சத்தின் மையம்.
வட்டத்தில் வலம்வந்து
என்னுள் உன்னை மூழ்கடித்துக் கொள்கிறாய்.
நான் யோனி
வாழ்வின் ஊற்று
ஆண்குறிகளின் காடு முளைகொள்ளும்
மூலம் நான்
நீ குருடு
உன் பொருட்டே
காந்தாரி நான் என் கண்களைக்
கட்டிக்கொண்டிருக்கின்றேன் என்பதை
நீ அறியாய்
நான் ஒளி
உலகத்தின் ஒளி
தூய்மையின் ஆத்மா
நான் காளித்தாய்
உணவு வழங்குபவள்
எனது கர்ப்பத்தில் இருந்து
வெளிவந்தவர்கள் நீங்கள் எல்லோரும்.
இருந்த பொழுதும்
நீ கேட்கிறாய்
என்னை யார் என்று?
நான் யார்?
நிலைத்தவொரு புள்ளி நான்
பிரபஞ்சத்தின் மையம்.

படிப்பகம்

www.padippakam.com

என் இருப்பின் மையத்தில்
என் இதயத்துள்
கவிதையொன்று துயில்கிறது.

ஒரு பாடலாக
ஒரு வசனமாக
ஒரு சொல்லாக
அதனை வடிவமைக்க முயல்கிறது
ஒரு மங்கிய கண்ணாடி.

இரவு பகலாக
என்னைத் தன்னோக்கி
இழுக்கிறது அது
இசையில்லை
சத்தமில்லை
அமைதிகூட ஊடுருவ முனைகிறது.

என்னுள் துயின்று கொண்டு
என்னைத் துயிலவிடா
என்ன கவிதை இது?

ஜமீலா நிஷத் : என் இதயத்தில் துயில்கிறது ஒரு கவிதை

படிப்பகம்

www.padippakam.com

எழுதுகோலுக்கும் காகிதத்திற்கும் இடையே
வெடித்தது போர்
வார்த்தைகள் குருதியில் குளித்துக் கொண்டன
காகிதம் இரண்டாகக் கிழிக்கப்பட்டது.
நீயும் நானும்
இரண்டு துண்டுகள்
அறையின் இரு மூலைகளில் கிடந்தன
காமத்தின் தேவதை
ஜன்னலுக்கால் வந்தது
துண்டுக் காகிதங்களைத் தூக்கி
கட்டிலில் வைத்தது
'நெருக்கம்' புனித நீரைத் தெளித்தது
அந்தப் பொழுதில்தான் கவிதை வடிவெடுத்தது.

ஜமீலா நிஷத் : என் இதயத்தில் துயில்கிறது ஒரு கவிதை

படிப்பகம்

www.padippakam.com

இரவில்
ஒரு கறுப்பத் தோணியில்
மரண அருவியல்
நாங்கள் மிதந்தோம்.

எவ்வளவு நேரந்தான்
வளைந்து நெளியும் வெண்துணியில்
படகோட்டியுடன் இந்த உயிர்ப்பிணங்கள்
மிதக்க முடியும் மௌனமாக

எப்பொழுது கரைதட்டும்
இந்தத் தோணி?

இந்த வெண்துணியில்
எப்பொழுது தன் வண்ணங்களை
விட்டெறியும் வானவில்.

ஜமீலா நிஷத் : என் இதயத்தில் துயில்கிறது ஒரு கவிதை

படிப்பகம்

www.padippakam.com

பெண்ணியம் பற்றிய எனது அனுபவமும் கருத்தும்.

ஜெகநாதன்

பெண்ணியம் பற்றிய சிந்தனைகளும் செயற்பாடுகளும் மேற்கத்தேய நாடுகளில் 1960, 1970 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் முனைப்புப் பெற்ற போதிலும் 1980 ம் ஆண்டு காலப்பகுதியிலே தான் இதுபற்றிய பிரக்ஞை யாழ்ப்பானத்தில் ஏற்படுகின்றது. பின் 1990 ஆம் ஆண்டின் நடுக்கூற்றிலேயே இது மட்டக்களப்புப் பிரதேசத்துக்கு நகர்த்தப்பட்டது. ஆனால் மிக அண்மைக் காலமாக யாழ்ப்பாணப் பிரதேசத்தை விட மட்டக்களப்புப் பிரதேசத்திலே தான் பெண்ணியம் பற்றிய பார்வையும், செயற்பாடுகளும் மிகத்தீவிரமாக மேற் கொள்ளப்படுவதை நாம் அவதானிக்கலாம் இத்தகைய பெண்ணியம் சார் செயற்பாடுகள் எமது பிரதேசங்களில் நிகழ்த்தப்படுகின்ற பொழுது அவற்றிற்கு எதிராக சமூகத்தில் இருந்து எதிர்ப்பலைகள் மேற்கிளம்புவதையும் நடைமுறையில் நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சமூகத்தில் இருந்து தோன்றியிருக்கின்ற இத்தகைய எதிர்ப்புணர்வுகள், பெண்விடுதலை நோக்கிய பயணத்தில் பின்னடைவுகளை ஏற்படுத்தி விடக்கூடிய சாத்தியப்பாடுகளும் இருக்கின்றன. இத்தகைய ஒரு சூழ்நிலையிலே பெண்நிலை வாதத்திற்கு எதிராக தோன்றியிருக்கின்ற எதிர்ப்பலைகளுக்கான காரணங்களை இனங்கண்டு, அவற்றைத் தீர்த்து, சமூக ஒருமைப்பாட்டைத் தோற்றுவிப்பதன் மூலம் பெண்விடுதலையை எமது சமூகத்தில் விரைவாகவும், இலகுவாகவும் பெற்றுக்கொள்ளலாம் எனவே இன்றைய சூழ்நிலையில் மேற்குறித்த செயற்பாடுகள் பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் •

ஆரம்ப காலத்திலிருந்தே நானும் ஆணாதிக்க எண்ணக்கருக்களால் மூடுண்டவனாக இருந்த பொழுது, மரபுவழிப்பட்ட ஐதீக, பௌராணிகச் சிந்தனைகளுக்குள் சிக்குண்டிருந்த பொழுது

படிப்பகம்

www.padippakam.com

எமது சமூகத்தால் கட்டமைக்கப்பட்டிருந்த வழக்காறுகளை பெண்கள் மீறி நடக்கின்ற பொழுது அவர்கள் மீது ஆத்திரப்பட்டிருக்கின்றேன்

குறிப்பாக பெண்கள் ஆண்களுக்கு அடிக்கமுனைகின்ற போது, ஆண்களோடு சமமாகப் பழகுகின்ற பொழுது, சைக்கிள் ஓடுகின்ற பொழுது, அவர்கள் மீது கோபப்படுவேன். "இவளுகளெல்லாம் பெட்டைகளா" என்று பேசுவேன். பொதுவாகச் சொல்லப் போனால் ஆண்களைப் போல் அவர்கள் நடக்கக் கூடாது. எப்பொழுதும் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு எனக்குள் இருந்தது. ஆண்கள் உழைத்துக் கொண்டுவர பெண்கள் சமைத்துப் போடுபவர்கள் இவ்களுக்கு வேறு என்ன வேலை தெரியும் என்ற எண்ணக்கரு எனக்குள் இருந்தது.

அண்மைக்காலத்தில் எமது சூழலில் பெண்ணியம் பற்றி கதைக்கப்படுகின்ற பொழுது, பெண்ணியச் செயற்பாடுகள் தீவிரமடைகின்ற பொழுது, பல்கலைக்கழக மட்டத்திலும் இச் செயற்பாடுகள் நுளைந்துகொண்ட பொழுது அவைமீது எனது கவனத்தையும் திசைதிருப்பினேன். இவற்றோடு கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைத்துறையில் நான்காம் ஆண்டில் நான் கல்வி கற்கின்ற வேளையில் என்பாட அலகிற்குள் பெண்ணிய அரங்கு, பெண்ணிய இலக்கியம் என்பன உள்ளடக்கப்பட்டிருந்ததால் கற்றல் ரீதியாகவும் இவற்றில் ஈடுபடவேண்டிய தேவை ஏற்பட்டது. இத்தகைய சூழ்நிலையிலேதான் பெண்ணிலைவாதச் சிந்தனை கொண்டவர்களோடும், அதுசார்ந்த அமைப்புக்களோடும் அவற்றினது செயற்பாடுகளிலும் கலந்துகொள்ளவேண்டிய ஒரு தேவையும் விருப்பும் ஏற்பட்டது.

இப்பின்னணிகளோடே பெண்ணியம்சார் அமைப்புக்களுக்குச் சென்று அவர்களுடன் இதுபற்றிக் கலந்துரையாடினேன். அவர்களது செயற்பாடுகளில் கலந்துகொண்டேன். இவற்றின் மூலம் எனக்குக் கிடைத்த கருத்துக்களும் அவதானிப்புக்களும் பெண்ணியம் பற்றி என்னை ஆழமாக நோக்க வைத்தது.பெண்கள் மீது ஒரு மீளப்பார்வையை செலுத்த வைத்தது. பெண்கள் எவ்வளவுதூரம் எமது சமூகத்தில் அடக்கப்படுகின்றார்கள் என சிந்திக்கத் தூண்டியது, ஆணாதிக்கச் சமூகத்தால் உருவாக்கப்பட்ட மரபுகள், வழக்காறுகள், ஐதீகம்

படிப்பகம்

www.padippakam.com

போன்றன பெண்களுக்கு எத்தகைய சுமைகளைக் கொடுக்கின்றன என புரியவைத்தது. குறிப்பாக ஒரு குடும்பத்தில் பெண்ணே சமைக்க வேண்டும், பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும், வீடுவாசல்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும், உடுதுணிகளைத் துவைக்க வேண்டும், என்று பாரிய பொறுப்புகள். ஆனால் ஆண்களுக்கு நேரத்திற்குச் சாப்பாடு, படம், நித்திரை, அரட்டை, எனது சொகுசான வாழ்கை. இவ்வாறான புரிதலுக்கு மத்தியிலேதான் பெண்விடுதலை பற்றிக் கதைக்கத் தொடங்கினேன். இதுபற்றிப் பலருடனம் கலந்துரையாடத் தொடங்கினேன். பெண்ணியச் செயற்பாடுகளிலும் காலடி எடுத்து வைத்தேன்.

இவ்வாறாக பெண்ணியச் செயற்பாடுகளில் நான் காலடி எடுத்து வைத்த போது சில அவதானிப்புக்களும், அனுபவங்களும், அவை தொடர்பாக சிலரின் விமர்சனக் கருத்துக்களும் பெண்ணியத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்புகள் சமூகத்தில் இருக்கின்றன. என்பதை உணரப் பண்ணின. குறிப்பாக 1999ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மகளிர் தினத்தின்று மகளிர் தின சின்னத்தை விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் போன்றவர்களிற்கு வழங்கிய போது சில மாணவர்கள் “என்ன மச்சான் நீயும் பெண்ணிலைவாதியா” என்றும் “இது எப்ப கூடார” என்றும் கேலி செய்த விதம் சில பெண்ணியச் செயற்பாடுகளை பார்க்கச் செல்லும் போதும், பார்த்துவிட்டுத் திரும்பும் போதும், சிலர் “உனக்கென்ன வேற வேலை இல்லையா” என்றும் “நீ என்ன பொட்டயள்ர கந்தோர்ப் பக்கம் கிடந்து வாறா” என்று என்னிடம் ஏளனமாகக் கேட்ட கேள்விகளும் 2000ம் ஆண்டு நவம்பர் 30ம் திகதி மட்டக்களப்பு காந்தி சிலை அருகில் கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பு நடத்திய “வன்முறைகளின் சாட்சிகளாக உடைகள்” என்ற நிகழ்வில் கலந்துகொண்ட போது “என்னடா இதுக்குள்ள நீயும் இவங்களோட சேந்துட்டியா? என்ற சிலரின் கேள்விகளும் பெண்ணியம் சார் அமைப்புக்களின் செயற்பாடுகளைப் பார்த்து சில பெண்கள் “ஆட்டுமாலைகள் படுற பாட்டப்பாரு” என்று கூறுகின்ற விதமும், சிலர் “இவளுகளுக்கு வேற வேலையில்லையா?” என்று அளவளாவுகின்ற போது பெண்ணியம் சார்ந்த அரங்க அளிக்கைகளில் ஈடுபடுகின்ற பெண்கள் ஏன் வெட்கப்பட்டுக் கொண்டு செய்கின்றார்கள் என்று வினாவுகின்ற பொழுது, இவற்றைச் செய்துபோட்டு அவங்கட வீட்டுல அதுகள் படுகிற கஷ்டம் உங்களுக்கெங்க விளங்கப் போகுது” எவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியில இதுகள் செய்யிதுகள் என்றும், அதற்குச்

படிப்பகம்

www.padippakam.com

சான்று பகர்கின்ற கருத்துக்கள் என்று எல்லாம் பெண்ணியவாதத்திற்கு எதிராக சமூகத்தில் பாரிய எதிர்ப்புக்கள் இருக்கின்றன என்பதை எனக்குள் புரியவைத்தன.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேதான் பெண்ணியச் சிந்தனைக்கு எதிராக ஏன் சமூகத்தில் பாரிய எதிர்ப்புக்கள் வருகின்றன என நான் சிந்திக்கத் தொடங்கினேன் இவ்வாறு சிந்தித்த பொழுதே பல கருத்துக்கள் என் மனதில் கேள்விகளாக எழும்பியது. குறிப்பாக பெண்ணியம் சார் அமைப்புக்கள் முன்வைக்கின்ற கருத்துக்கள் என்ன? அவைகளின் கருத்துக்களை ஏன் பெரும்பாலான ஆண்கள் எதிர்க்கின்றார்கள்? பெண்ணியம் சார் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஏன் சமூகத்தில் பிரச்சினைகள் வருகின்றன? எமது பிரதேச பெண்ணிய அமைப்புக்கள் பெண்ணியம் பற்றி பிழையான கருத்துக்களைப் பரப்புகின்றனவா ? அல்லது பெண்ணியம் பற்றிய கருத்துக்களை முன்வைக்கின்ற பொழுது பிழையான வழிகளில் முன்னெடுக்கின்றனவா? அல்லது இதனை எதிர்ப்பவர்கள் பெண்ணியச் சிந்தனையை தவறாக விளங்கிக் கொள்கின்றார்களா? பெண்ணியச் சிந்தனை எவ்வளவு தூரம் எமது சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது? போன்ற வினாக்கள் எழுகின்றன. இவற்றுக்கு பெண்நிலைவாத சிந்தனையாளர்களோடு ஆழமாகக் கலந்துரையாட வேண்டும் இதனை எதிர்ப்பவர்களோடு கலந்துரையாட வேண்டும் இப் பெண்நிலைவாத சிந்தனை பற்றி ஒரு தெளிவைப்பெற வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு இன்று எனக்குள் இருக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com

நியாயப்படுத்த முடியாதவளாக

தில்லை

இழந்துவிட்டவை அனைத்தும்
தவிர்க்கமுடியாதவை
பறிக்கப்பட்டவைகளாகவும்
நீண்டகாலமாய்
திணிக்கப்பட்டவைகளாகவும்
என்னுடைய தருணங்களில்
இழந்து இழந்து
நிறையவே நம்பியிருக்கின்றேன்
ஆயினும் நான்
துன்பங்களை ஏற்றுக்கொள்ள
முடியாதவள்ளாகவும்
சந்தோஷங்களை அனுபவிக்க
முடியாதவளாகவும்
உண்மைகளை நினைத்தழுகிறேன்
நியாயப்புடுத்த முடியாதவளாக.

படிப்பகம்

www.padippakam.com

சாதுரியமே பலம் – 2

வாசுகி.ஜெ



ஒரு ஊரில ஒரு புருசனும் அவனிட மனுசியும் இருந்தினமாம்.

மனுசன் ஒவ்வொரு நாளும் வயற்காட்டுக்குப் போவானாம். மனுசி மதியத்தில சோறு கறியாக்கி எடுத்துப் போவாவாம்.

படிப்பகம்



அவ எவ்வளவு கஸ்ரப்பட்டு ஆக்கி எடுத்திட்டுப் போனாலும் ஒரே ஏச்சும் உதையும் தான்.

மனுசிக்கு இனி ஏலாது.ஒரு நாள் வீட்டு வேலை எல்லாம் முடிக்க நேரமாயிட்டுது.சோறாக்கல, மனுசனுக்கு சோறெடுத்திட்டுப் போற நேரமாச்சுது. அவ யோசிக்கிறாவு.

பெட்டியில பச்சப்படியா
அரிசியையும்
மரக்கறியையும் வச்சி
எடுத்துக்கொண்டு
போறாவாம்

தூர வரக்கையே
மனுசன் கண்டுத்து
அடிக்கிறத்துக்கு ஓடி
வாறானாம்

www.padippakam.com

மனிசி பயப்பிடல்ல, பெட்டிய இறக்கி வக்கிறாவு அவன் அடிக்கவும் அவ இப்பிடிக் கத்துறாவு



இவன் என்னை அடிச்சுக் சாக்காட்டுறான். சோறு கறி எல்லாம் பச்யைாப் போ !!!!!!!!!

படிப்பகம்

www.padippakam.com

மனுசன் பெட்டியத்
திறந்து பாத்தா, எல்லாம்
ஆக்காமல் அப்படியே
பச்சையா இருக்கு



மனுசன் பயந்துட்டான்

அதுக்குப்பிறகு மனிசிய நல்லா
மரியாதையா நடத்தி வாறானாம்

படிப்பகம்

www.padippakam.com

சி.எஸ். சந்திரிகாவின் சிறுகதை

சி.எஸ். சந்திரிகா, 1967ம் ஆண்டு, கேரளா மாநிலத்தில் பிறந்தார், கள்ளிக்கோட்டை பல்கலைக்கழகத்தில் தாவரவியலில் இளம் விஞ்ஞானமானி (B.Sc) பட்டத்தையும், அதே பல்கலைகழகத்தில் மலையாள இலக்கியத்தில் முதுகலைமானி (M.A) பட்டத்தையும் பெற்ற இவர், தனது கலாநிதிப் பட்டத்திற்காக அதே பல்கலைக்கழகத்தின், நாடகக் கல்லூரியில் மலையாள நாடக அரங்கில் பெண்களின் இடஒதுக்கீடும், பிரதிநிதித்துவமும் என்பதின் கீழ் தனது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

மலையாளமும், ஆங்கிலமும் தெரிந்த அவர், பெண்கள் இயக்கங்கள், சிறுவர்களின் கல்விப்பிரச்சினைகள், விடயங்கள், பழங்குடி மக்களின் விடயங்கள் வேலை கொள்ளும் இடங்களில் பெண்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் எனபவற்றில் ஆய்வுத்திட்டங்களை பூர்த்தி செய்துள்ளார், மலையாளத்தில் கேரளப்பெண்கள் இயக்க வரலாறு என்னும் நூலையும் மலையாளம், ஆங்கிலம் மற்றும் ஏனைய இந்திய மொழிகளில் கே. சரஸ்வதி அம்மாவின் வாழ்க்கை வரலாறு என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார். கேரள வரலாறு, மனித உரிமைப் போராட்டங்கள், நவீன சமூக இயக்கங்கள், பாலியற் தொழிலாளப் பெண்கள், பாலியல் விற்பனையில் பெண்கள், விடயங்கள், பழங்குடி மக்களின் விடயங்கள என்பன பற்றிய கற்கைகளை நடாத்தி பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

புகழ்பெற்ற மலையாள வார இதழ்களில் இவரது சிறுகதைகள் பிரசுரமாயுள்ளன. கேரள சாகித்திய அகாதமியால் இவரது சிறுகதைகள் ஆங்கிலத்துக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. நாடகம், இலக்கியம், திரைப்படம், ஓவியம், சிற்பம், கலாச்சாரத்துறைகளில் மிகவும் ஆழமான தடத்தைப்பதித்து அவ்வத்துறைகளின் செழுமைக்கு பங்களிப்புச்செய்துள்ள C.S சந்திரிகா , நாடகங்களை இயக்கியும், நடித்தும், பல கருத்தரங்குகளையும், மநாடுகளையும்ஒழுங்கு செய்த பிரதான ஏற்பாட்டாளராகவும் இருந்துமுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com

கபாளி

மலையாளம் : சி.எஸ்.சந்திரிகா
தமிழ் : அம்ரிதா ஏயெம்

சஞ்சலப்பட்டுக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் சீதாவின் இதயம்போல் 'கபாளி' ஜனசந்தடியால் ஆரவாரப்பட்டுக்கொண்டிருந்தது. 'வைனாட்' மலைத்தொடர்களின் மேல் கவிந்திருந்த பனிப்புகார்கள் திடீரென விரைவாக உருகத் தொடங்கின. ஒருநாளும் இல்லாதவாறு காற்று பள்ளத்தாக்குகளைத் தாண்டி கொஞ்சம் கடுமையாக வீசிக்கொண்டிருந்தது.

"'கபாளி' தனது அமைதியை இழந்துகொண்டிருக்கின்றது" என்று ஆய்வுகளுக்காக வரும் சூழலியலாளர்கள் சொல்வது வழக்கம்.

தேவைக்கதிகமான பணிவுடன், தனது மண்ணின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனத்தின் விளிம்பில் இருந்துகொண்டு "ஒரு மிருகத்தையெண்டாலும் பார்ப்பதற்கு இங்க ஏலாது. இங்க நீங்க இதுக்கு முன்ன வந்திருக்க வேணும் சேர்" என்று பனி கவிந்திருந்த நீலநிறக் காட்டை வீடியோ பண்ணிக்கொண்டிருந்த உல்லாசப் பிரயாணியை நோக்கி வழிகாட்டி சொன்னான்.

மலையோரத்தில் கட்டப்பட்டிருந்த மலைஜாதியினரின் ஒரு குடிசையில் இருந்து சீதா வெளியே வந்து, தனது குரலை உயர்த்தி என்னவோ சொன்னாள்.

உல்லாசப் பிரயாணிகளாய் வந்த நபர்கள் ஜீப்புக்களில் ஏறித் திரிந்ததையும், சாரி சாரியாக காட்டை நோக்கி படையெடுத்ததையும், சாராயப் போத்தல்களைத் திறந்து உயரத்தூக்கி எல்லோரும் சேர்ந்து உரக்கக் கத்தி, கூத்தடித்துக் காட்டின் அமைதியைக் கலைத்ததையும் தவிர இங்கு வேறொன்றும் நடக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com

வந்தும் போயும், அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருக்கும் உல்லாசப் பயணிகளைப் பார்த்ததும் அவளது முகம் கறுத்துக் கொண்டு வந்தது. அந்தச் சிறுமலைக் கிராமத்தின் மீது சூரிய வெளிச்சம் வெளிறிப் பரவுவதை அவள் தனது கூடாரத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு முன்பு, அழுக்கடைந்த, தங்களது பிட்டபாகங்களை அரிப்பினால் சொறிந்துகொண்டு, "ஸ்கேவி" பிடித்த தோலும் எலும்பும் வளர்ச்சி குன்றிய சிறுவர்களும், குந்திக் கொண்டு குளிர்காய்கிற, தோலில் சுருக்கங்கள் நிறைந்த வயதானவர்களும் மட்டும்தான் அங்கே இருந்தார்கள்.

மலைஜாதியினரின் வாழ்க்கை என்றால் இப்படித்தானே இருக்கும்

சூரியவெளிச்சம் அவளது கண்களை ஊடுருவ, அவள் பாதையைப் பார்த்தாள். நெற்செய்கையின்றி மலையோரத்துக்கு அப்பால், முடிவற்று வயல்வெளிகள் நீண்டு பரவிக் கிடந்தன. வாழைக்குலைகள் காற்றிலே அசைந்தாடிக் கொண்டிருந்தன. வயல்களில் கூலிக்கு விவசாயிகள் வேலைசெய்துகொண்டிருந்தார்கள். அவர்களது முதலாளிகளும் அங்கே இருக்க வேண்டும். அவர்கள் தங்களது முகத்தை மூடிக்கொண்டு, முதுகுக்குப் பின்னால் தொங்கிக்கொண்டிருந்த உருளைவடிவ பம்பிகளினால் பயிர்களுக்கு பூச்சிநாசினிகளை விசிறிக்கொண்டிருந்தார்கள். காற்று சுமந்துவந்த பூச்சிநாசினியின் நச்சு அவள் மூக்கிற்குள் நுழைந்தது.

அங்கே ஒன்றும் பார்ப்பதற்கு இல்லை. அவள் தரையில் சுருண்டு கிடந்தாள். குடல்கள் வெளியே வந்து, வாந்தியெடுக்கப் போவதை உணர்ந்தாள். காற்று வயல்களுக்கூடாக வீசி, மீண்டும் நஞ்சைச் சுமந்துகொண்டு அவளது மூக்கின் ஊடாக நுழைந்தது.

"இல்ல..." பெரும் முயற்சியெடுத்து அதிலிருந்து விடுபட எண்ணினாள். இருந்தாலும், அந்த நச்சுக் காற்றுக்கு அவளை வாந்தியெடுக் வைப்பதுதான் குறியாகி இருந்தது.

சீதா மயக்கமாகி விழுந்தாள். அவளது வயிறு ஒன்றுமில்லாமல் காலியாகிவிட்டிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com

மலைக்காடுகளை வெட்டி, துப்பரவாக்கி, விதைவிதைத்து களனி நிறையக் கண்டு, செழிப்பான நிறைந்த அறுவடைகளை விரும்பிய மாதிரியே பெற்று, மகிழ்ந்து, பறவைகளுடனும், நீரோடைகளுடனும், பாட்டுப்பாடி ஆட்டம் ஆடிய அந்த முன்னோர்களின் பேத்தி இன்று கஷ்டத்தில் இருந்தாள்.

எங்கே எனது தாயும் தந்தையும் போய்விட்டார்கள்? அவளது குடிசையில் மயான அமைதி நிலவியது. அவள் கண்களை மூடிக்கொண்டு அதே மயானத்தின புதைகுளியின் மேலேயே இருந்தாள்.

அந்தச் சிறு கிராமத்திற்கு மேலிருந்த கோப்பித் தோட்டத்திலிருந்து பெரிய கத்துச் சத்தம் காற்றிலே மேலெழும்பி, அவளது குடிசையை சட்டென ஆடவைத்தது.

சீதா அவளது களைப்பை மறந்தாள். அவளது காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டாள். எங்கே... எங்கேயோ இருந்து ஒரு குழந்தையின் அழுகைச் சத்தம் தெளிவாகக் கேட்டது. அழுகின்ற அவளை யாரோ அடிக்கின்றார்கள என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டாள்.

அங்கே, அவர்களது ஒறேஞ்சுத் தோட்டத்தைக் காவல் காக்கப் போயிருந்த வேலைக்காரப் பையன்கள் வந்துகொண்டிருந்தார்கள். அழுதுகொண்டு ஓடிக்கொண்டிருக்கும் அவர்களுள் ஒருவனின் கறுத்த நெஞ்சுப் பாகத்தின் முன்னால் இருந்த ஒறேஞ்சுப் பழங்கள் பிரகாசித்தன. அவர்களுக்குப் பின்னால் அந்தச் சிற்றாறை நோக்கி எஸ்ரேற் முதலாளியும் அவனுடைய நண்பர்களும் வந்துகொண்டிருந்தார்கள்.

சீதா விரைவாக குடிசைக்குள் போய் மறைந்துகொண்டாள்.

நித்திரையிலிருந்து விழித்துக்கொண்டது போல அம்மா பயத்தில் அப்பாவைப் பார்த்தாள்.

“எங்கட மகள்.........”

அப்பா கண்ணை மூடியபடி கிடந்தார். “சீதா சப்பிய மாதிரி இல்லை’ அவள் தைரியமானவள்”

படிப்பகம்

www.padippakam.com

" என்ர சாமுண்டித் தெய்வமே! எங்கட சீதாவைக் காப்பாத்து!......"
அவளைப் பெத்த வயறு பத்தியது. இதயம் இடிந்து நொறுங்கி நடுங்கிக் கொதிக்கும் வெப்பத்தில், தந்தை கொடுத்த உயிர் உருகிக்கொண்டிருந்தது.

"மாலி.......! என்ர சீதாவையாவது காப்பாத்து"

வைனாட் மலைத் தொடர்களில் இருந்த மரங்கள் ஆடின. முறிந்து ஒடிந்து கிடந்த கிளைகளில் கடவுள்கள் சிக்குப்பட்டுக் கிடந்தார்கள். மலையுச்சியில் நீர் வழிந்தோடி வருகிற மூலங்கள் ஆற்றுக்கு அருகேதான் இருந்தன. அவைகள் எவராலும் தடுக்கப்பட முடியாதவை. ஆறு அவைகளை அடித்து உடைத்துக் கொண்டு வெளியேறியது. குருமதியின் கடவுள் மரங்களினதும், மலைகளினதும், ஆறுகளினதும் பாதுகாப்புக்காக போராடிக்கொண்டிருந்தார். அடையாளம் தெரியாத கோடரியால் அந்தப் பெரிய மரம் வெட்டி வீழ்த்தப்பட்டு நாளங்களினூடாக குருதி பாய்ந்து 'கபானி' யில் விழுந்து சிந்துப்படுவதற்கு சற்று முன்னர் சொன்னது.

" நீ இந்த அழுகச் சத்தத்த கேட்கலயா?" என்று. அடுத்த நிமிடம் மரம் விழுந்து செத்தது. இன்னுமொரு நீர் தருகின்ற மூலம் போராடி ஆற்றினை அடைவதற்கு முன்னேயே மறைந்துவிட்டது. சூரியன் சுட்டெரித்து வெப்பத்தினால் மலைகளும் பாறைகளும் வறண்டன. பின்னர் நீர் மூலங்களும் வறண்டு காய்ந்தன. மேற்குத் தொடர்ச்சி மலையோரமிருந்து வீசும் காற்றுக்கூட செத்த சவம் மாதிரி நின்று இயற்கை அன்னையின் உயிர் ஊசலாடுவதை கண்டுகொண்டிருந்தது.

சிற்றூருக்கு வெளியே ஒன்றும் அசையவில்லை. சீதா யாருக்கும் தெரியாமல் தனது தலையை விட்டு வெளியே எட்டிப்பார்த்தாள். அந்தப் பையன்கள் கூட்டம் ஒறேஞ்சுப் பழங்களுக்காகப் போட்ட சண்டை திடீரென தீவிரமடையத் தொடங்கியது.

அவர்கள் போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் பையன்கள் சண்டை பிடிக்காமல் இருக்க மாட்டார்கள். சீதா தைரியமாக விறாந்தைக்குள் வந்தாள். கீழே எஸ்ரேற் முதலாளியும் அவருடைய நண்பர்களும் மறைந்து கொண்டிருந்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் மறைந்து போய்க்கொண்டிருந்த திசையைப் பார்த்து சீதாவின் நாய் ஊளையிட்டது. அவளின் கைகளில் இருந்து கத்தி பறந்தது, அவளுக்கு முன்னே சுப்பி இருந்தாள். “கடவுளே ஒரு பொம்புளைகளையும் இந்தச் சின்ன ஊரில் இவனுகள் இரிக்கவிடமாட்டானுகள்”

அவள் தரையில் விழுந்து தனது கண்களை இறுக்க மூடினாள். அவளது கண்களில் தொங்கிக்கொண்டு சுப்பி வந்துகொண்டிருப்பாள். அவளின் மெலிந்துபோன பலவீனமான காலிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருக்கும்.

திடீரென இரத்த வெள்ளம் அந்தச் சிற்றூரில் தோன்றியது அது சீதாவின் குடிசைவரை வந்தது. நாய் ஊளை இடுகின்றது....... சுப்பி தனது கையினால் தனது சகோதரியைப் பிடித்துக்கொண்டிருந்தாள். அவள் ஏதோ சொல்வதற்காக வாயைத் திறந்தாள்.

“எனக்கு விசம் தந்திட்டாங்க... , நான் இனி எஸ்ரேற் முதலாளியிட பிள்ளையைப் பெற முடியாது”

சுப்பி அந்தச் சிற்றூரில் கர்ப்பமாக்கப்பட்ட முதலாவது பெண்ணுமல்ல. சுப்பி கருக்கலைப்புக்காக நஞ்சூட்டப்பட்ட முதலாவது பெண்ணுமல்ல. என்பதை சீதா நன்கு அறிவாள்.

கிராமத்துப் பாதைகளில் திருட்டுத்தனமாக இரைதேடும் ‘ஒக்ரோபஸ்’கள் பதுங்கியிருக்கும். அவைகளின் பிடியிலிருந்து ஒருவருமே தப்ப முடியாது. ஒருநாள் இப்படித்தான், ஓடி ஓடிக் களைப்படைந்து முடிவில் சுப்பி மாட்டிக்கொண்டாள்.

கத்தியின் கூரை விரலில் தடவிக்கொண்டிருந்தபடி சுப்பி சொன்னாள் “கவனமாயிருக்கனும் உன்னக்கூட அவனுங்க பிடிச்சிருவானுங்க.....” என்று.

சீதா கண்களைத் திறந்தாள். சீதாவின் சுப்பியும்தானா? நாய் மட்டும் அதன் ஊளையை நிறுத்திப் பெருமூச்சு விட்டது. அவளது பாதுகாப்பின் பொருட்டு ஊளையிட்டுக் கொண்டிருந்த அந்நாயின் கண்களைப் பார்த்தாள்.

படிப்பகம்

www.padippakam.com

கண்கள் நிரம்பிவிட்டன. காய்ந்து மெலிந்துபோன வயிற்றுடன் நின்று, கொண்டு பார்க்க சீதாவால் முடியாமல் போய்விட்டது. அவள் முகத்தைத் திருப்பி தாய் எங்கிருக்கின்றாள் என்று பார்த்துக்கொண்டு தாயைக் கூப்பிட்டாள்.

தாய் கேட்டுக் கொண்டிருந்தாள். அது மெலிய பலவீனமான அழுகைச் சத்தம். தூங்க வைக்கத் தாய்பாடும் தாலாட்டு என்று சீதா நினைத்தாள்.

பறவைகளும், விலங்குகளும் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிவிட்டிருந்தன. காற்று ரீங்காரத்துடன் மென்மையாக வீசிக்கொண்டிருந்தது.முழுக் கிராமமும் நித்திரையில் மூழ்கியிருந்தது.'மசானுக்கு' கொஞ்சம் கீழே ஒருவன் மட்டும் விழித்துக்கொண்டிருந்தான். அவன் வயது போன புலுசான் கிழவன். தனது பயிர்களை இரவில் களவாக மேயவரும் விலங்குகளைத் துரத்த சத்தம் போட்டுக்கொண்டு இருந்தான். அவனின் சத்தம் எல்லா இரவுகளிலும் சீதாவை விழித்துக் கொண்டிருக்கப் பண்ணிவிடுகின்றது. புலுசான், முதலாளியின் வாழைத்தோட்டங்களையும் கண்காணிக்க வேண்டியிருந்தது.மூங்கில் தோட்டத்தின் உச்சியில் இருந்துகொண்டு அவனால் மலையடிவாரத்தில் வந்துகொண்டிருந்த யானைகளை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. புலுசானின் சத்தத்தைக் கேட்டவுடன் யானைகள் இந்நேரம் காட்டுக்குள் திரும்பியிருக்கும்.

புலுசான் தனது பறையை எடுத்து முழக்கித் தன்னைத் தானாகவே பெரும் முயற்சி எடுத்து விழிக்கச் செய்துகொண்டிருந்தான். வெளிச்சத்தில் கபானிக்கு நீரருந்த வந்து திரும்பிக்கொண்டிருந்த மான்கள் கூட்டம் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தன.

நிலாவெளிச்சமும் பனிப்புகாரும் இந்த வனாந்தரத்தையும், மலைத்தொடர்களையும் மூடிக் கவிந்து நிரப்பி பள்ளத்தாக்கினுள் வழிந்து கொண்டிருந்தன. விறாந்தையில் நித்திரை செய்துகொண்டிருந்த சீதாவை நிலவொளி தழுவியது. அவள் சின்னப் பிள்ளை மாதிரி இருமடங்கு பனிப்புகாரை போர்த்துக்கொண்டு நித்திரையில் புரண்டாள்

படிப்பகம்

www.padippakam.com

கணநேரத்தில் அந்தக் கானகத்தின் அடர்ந்த அமைதியெல்லாம் குலைக்கப்பட்டது. அந்தச் சிற்றூரில் எல்லோரும் விழித்துக் கொண்டனர். சீதாவும்கூட விழித்துக் கொண்டாள். அந்த அமைதியின்மை கனவா நனவா என நிச்சயப்படுத்திக்கொள்ள முடியாமல் விழித்தாள்.

"முத்துவின் அம்மா காலமாயிட்டா"

பட்டமாயி செத்துட்டா. மிகுந்த பிரயாசைப்பட்டு பாதங்களை வைத்து வலியுடன் சில அடிகள் நடந்தபோது, புலுசான் மேலும் கீழும் மூச்சுவாங்க ஓடிக்கொண்டிருப்பதை அவள் கண்டாள்.

"எல்லோரும் வாங்க எல்லோரும் ஊரக்கூட்டுங்க"

இந்த நேரத்தில் பறை அடிபடும் சத்தம் கேட்கத் தொடங்கியது. மூப்பன் மற்றவர்களின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதையும், அவன் கிழிந்த போர்வையை போர்த்திக்கொண்டு நிற்பதையும் நடந்து போகும் போது சீதா கண்டாள். மூப்பனைச் சுற்றி நித்திரை நிறைந்த கண்களுடன் அசதியுற்ற மனிதர்கள் நின்று கொண்டிருந்தார்கள்

"நாம முடிவெடுத்ததற்குப் பின்னர்தான் பாட்டும் ஆட்டமும் ஆரம்பிக்க வேண்டும்" என்றான் மூப்பன்.

அந்த மலைத்தொடர்களின் மேலிருந்த சிற்றூர் யாரோ ஒருவனின் அல்லது ஒருத்தியின் சாவுக்குப் பாட்டுப்பாடி ஆட்டம்போட முழித்துக்கொண்டது. ஒருத்தரும் ஒன்றும் சொல்லவில்லை. மூப்பன் எல்லோருடைய முகத்தையும் பார்த்தான். ஒருவருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. எல்லோரும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்றார்கள். பெண்கள் என்ன சொல்லப் போகின்றார்கள் என்று மூப்பன் நின்றான். சீதா அவர்கள் பின்னால் மறைவதைக் கண்ட மூப்பன் ஏதோ யோசித்தான். அவனுக்கு விடை கிடைத்தது மாதிரி மூப்பன் மெதுவாகப் பேசத் தொடங்கினான்.

"பட்டாக்கு என்ன செய்யோணும் எண்டு நான் சொல்லுறன்". "எல்லோரும் மூப்பனைப் பார்த்தார்கள்". நாங்க சீதாவோட அம்மாவையும் அப்பாவையும் புதைச்சமாதிரி, அவளையும் அவளிட குடிசையிலே புதைப்பம்."

படிப்பகம்

www.padippakam.com

அவர்களுடைய தலைகளெல்லாம் அமைதியில் தொங்கின. மூப்பன் உற்சாகமிழந்து கோபம் கொண்டவனாகக் காணப்பட்டான்.

வேறு என்ன செய்ய எங்களால் முடியும்?

மூப்பனின் குரல் குளிரில் நனைந்து திணறியது. மூப்பன் எண்பது வயதான கிழவன். அவன் வாழ்கையில் நிறையவற்றை பார்த்துவிட்டிருந்தான். சீதாவின் தந்தைக்கு பதினாறு ஏக்கர் காணி இருந்தது. அவனுடைய சவத்தைக்கூட புதைப்பதற்கு ஒரு சின்னத் துண்டு நிலமில்லாமல் முழு நிலமும் முதலாளிமாரால் அடாத்தாக அபகரிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்துக்கும் இடுகாடாகப் பாவிக்க சில ஏக்கர்கள் 'மசானா' இருப்பது வழக்கம். இப்போது இந்த மசானா கூட அவர்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது.

மூப்பன் இருமத் தொட கங்கினான். மூப்பன் இருமுவதையும், நடுங்குவதையும் பார்த்து சீதா கதைக் ககத் தொடங்கினாள்.

"ஆனா இப்ப........... பட்டமாயிர குடிசையில விறாந்த இல்ல."

ஒவ்வொருவரும் அமைதியாக கவனத்துடன் கேட்டார்கள்.

மூப்பனுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. இவள் ஒருவளாவது கருத்துத் தெரிவிக்கிறாளே என்று.

"அந்தக் குடிசையில ஒரே ஒரு அறைதான் இருக்கு. இவவ புதைக்கிறத்துக்கு, குடிசைய இடிச்சிப்போட்டு, பின்ன மறுகாலும் அதே இடத்துல குடிசையக் கட்டுவோம். பின்ன இருந்து வாழுவம்.

"மூப்பன் நடுங்கிக் கொண்டே கதைக்கத் தொடங்கினான்.

"ம்.... எங்க..... எங்க எங்களுக்க நெலம் இரிக்கி..."

இந்தக் கேள்வி அந்த நீண்டு விரவிய பள்ளத்தாக்கு எங்கும் எதிரொலித்தது.

இப்போ எல்லாவற்றுக்கம் முடிவு கண்டது மாதிரி மூப்பன் எழும்பினான்.

"இப்ப நாங்க ஆடுவம் பாடுவம்.... ஹாய்".

மணிமாலாவிற்கு மேல் விடிவெள்ளி தோன்றும் வரை அவர்கள் ஆடினார்கள். ஆடிப்பாடி உடலும் கால்களும் களைத்தபோது கூட அவர்கள் இன்னும் ஆடிப்பாடிக் கொண்டிருந்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

"செத்தவங்க மீண்டும் காற்றாய் மழையாய் வருவாங்க..." இது அந்த மலைஜாதி மக்களின் நம்பிக்கை.

சூரியன் உதயமாயிருக்கும் வேளை, அரைவாசி அழிந்த நிலையில் இருந்த புல்லால் வேயப்பட்ட குடிசை அகற்றப்பட்டது. மூங்கில் கம்புகளைக் கொத்திப் பிளந்து இடையே சேறு வைத்து இறுக்கிச் செய்யப்பட்ட சுவர் கொண்டுவரப்பட்டது. நீளமாகக் கொஞ்சம் நிலத்தைத் தோண்டினார்கள். மெல்லிய கறுத்த பட்டாவின் உடலை அதற்குள் இறக்கினார்கள்.

ஒரு குழி, ஒரே ஒரு குழி. வாழ்வுக்கும் சாவுக்கும் அதே குழி.

சீதாவால் இதனைத் தாங்கமுடியவில்லை. "புலாவிலி" சடங்குக்குப் பின்னர் அவள் குடிசைக்குத் திரும்பினாள். அவள் நீலமாகி நீண்டு விரவிக் கிடந்த பள்ளத்தாக்கைப் பார்த்துச் சத்தம் போட்டாள்.

"என்ர மக்கள் இனிமேலாவது சாகாமல் இருக்கமாட்டாங்களா?"

"எங்களுக்கு கொஞ்சத்துண்டு நிலத்தக்கூட எங்கள புதைக்கிறத்திற்குத் தரமாட்டாங்களா.....?"

பட்டம்மாயியும், அவளது தகப்பனும், தாயும் மூச்சுத் திணறி நிலத்துக்குக் கீழ் விம்மிக்கொண்டிருந்தார்கள்.
சீதாவால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவளது கண்களில் இருந்து கண்ணீர் விழுந்து சாணத்தால் மெழுகிய அவளது வீட்டுத் தரையை நனைத்தது.

மீண்டும் நீலமாகி நீண்டு பரவிக்கிடந்த அந்தப் பள்ளத்தாக்கை நோக்கி ஒரு நோட்டம் விட்டாள். புத்தி பேதலித்துப் போனதுபோல பிரக்ஞையுடனும், சக்தியுடனும் ஈரமான நிலத்தைத் தோண்டத் தொடங்கினாள்.

புதிய உல்லாசப் பிரயாணிகள ஏற்கனவே சூரியன் எழுவதற்கு முன்னேயே கூட்டங் கூட்டமாக வரத்தொடங்கி விட்டிருந்தார்கள். மலைகளைக் கவித்திருந்த பனிப்புகார்கள் உருகத் தொடங்கின.

படிப்பகம்

www.padippakam.com

நானும்....

விஜயலட்சுமி

ஒரு வாலுடனும்
அல்லது இரு கொம்புகளுடனும்
சில சிறகுகளுடனும்
நான் பிறந்திருக்கலாம்
உன் நேசிப்பிற்குரியவளாக
நீ சொல்லிய படியே..
உன்னைச்
சுற்றிச் சுற்றி வந்திருப்பேன்
ஆனால்..
உன்னைப் போலவே
ஒரு தலையுடனும்
இரு கண்களுடனும்
இரு கால்களுடனும்
நிமிர்ந்த முள்ளந்தண்டுடனும்
உன்னைப் போலவே
வாழ வேண்டும் எனும்
உணர்வுள்ள இதயத்துடனும்
பிறந்து விட்டது
என்னைப்
போராடவைத்துவிட்டது.

படிப்பகம்

மின்மினிப் பூச்சிக்கு....

தில்லை

ஔவை, உனது கவிதைகளைப்படித்த பின்புதான் அவை எவ்வாறான நிலைகளில் எழுதப்பட்டவை, உன்னுடைய வாழ்க்கை எவ்வளவு அனுபவங்கள் நிறைந்தது? என்ற கேள்விகள் என்னுள் எழுகிறது.ஆரம்ப காலங்களில் எனக்குக் கவிதை என்றால் கற்பனையில் யோசித்து யோசித்துக் கோர்த்தெடுத்த சொற்களுக்கு சீர், தளை, அடி, தொடை, சந்தம் எதுகை மோனை இன்னும் ஏதோ எல்லாம் சேர்ந்து அதற்குப் பொருத்தமான தலைப்பிட்டு........

வேண்டாம் எனது குழப்பம். சங்க இலக்கியம் படித்த பின்பு எனக்கு இயற்கை சார்ந்த சொல்லமைவுகள் இலக்கியத்துக்குப் பொருளாக்கப்பட்ட நுட்பம் தெரிந்தது.

உனது கவிதைகளைப் படித்த பின்புதான்- மங்கையக்கா உனது கவிதைகளுக்கு எழுதிய முன்னுரையில் “சிக்கல்களும் முரண்களும் புதிதாகத் தலைதூக்கும் காலத்தில் நம்மை வெளிப்படுத்த புதிதாக மொழிகளைக் கண்டுள்ளோமா?” என்று கேட்ட கேள்வி உறைத்தது.

www.padippakam.com

பெண்ணின விழிப்புக்கு வெளிப்பாட்டு மொழி ஒன்றின் அவசியம் காலத்தின் தேவையாக உள்ளதை உனது கவிதைகள் உணரத் தொடங்கியிருப்பதை நான் கண்டுள்ளேன்.

சாதாரண மனித வாழ்வின் அனுபவங்கள் புதிய அர்த்தங்களை கொடுக்கின்றது. உன்னுடைய அனுபவங்களோ புதிய சிருஷ்டிகளைத் தருகின்றது. அவைதான் உனது கவிதைகள்.

இன்றைய ஈழத்து எழுத்தாளர் அதுவும் பெண் எழுத்தாளர்களுள் கவிதைக்குப் பரிட்சயமானவள் நீ..

உனது கவிதைகள் முழுவதும் வாசித்து முடித்த பிறகு இந்தச் சின்னஞ்சிறிய உலகத்துக்கு அப்பால் நீ துணிச்சலாக நிற்பது எனக்குத் தெரிகிறது.

"எதையும் நினைந்தழுதல்
இப்போது சாத்தியமில்லை
மனிதத்தின்மீது நம்பிக்கை கொண்டு
உயிர்த்தெழுதலே வாழ்வு"

என நீ திடங் கொள்ளச் செய்வது என்னையும் சேர்த்துத்தான்.

உனது கவிதைகளை நான் வேதனைகளாகவும் வியப்பாகவும் பார்க்கவில்லை நேரடியாக நீ அனுபவித்த துயரங்களும் கொடூரங்களும் உணர்வுகளும் அவை.

நீ......

" இன்னுமா தாய் நிலம்
புதல்வர்களைக் கேட்கின்றது."

எனத் "தாயின் குரல்" கவிதையில் கேட்கும் போது உதடுகளை மூடிக் கொண்டு இதயத்தைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கும் தாய்மாரின் ஈனக் குரலாகவே எனக்குக் கேட்கிறது.

ஔவை நீ கவிதை எழுதுகின்ற போது எமது வாழ்வோடும் ஈழப் போரோடும் உன்னை இணைத்துக் கொள்ளும் உளவியல் பாங்கு....? புதிய புதிய உத்திகளில் உன்னையும் மீறிச் சமகால வாழ்வைப் பதிவு செய்கிறாய். அறிவுத் தளத்திலும் உணர்வுத் தளத்திலும் நின்று சிந்திக்கும் உனது வாழ்தல் பற்றிய உண்மைக் கருத்துக்கள் உனது கவிதைகளில் பாடுபொருளாவது சமூகத் தேவையாகின்ற அதே வேளை பெண்ணின இருப்புப் பற்றிய ஒரு [illegible]ாகவும் உள்ளதல்லவா?

படிப்பகம்

www.padippakam.com

ஒரு தோழியின் குரல் கவிதையில்

"மானாக மருளாதே
அன்னம்போல் அசையாதே
வீறுகொண்டு எழு
எமது உரிமையை வென்றெடுப்போம்"

எனச் சமூகம் செய்த மனவசியத்திலிருந்து பெண்களை விடுவித்துக்கொள்ளவும் பெண்களின் உரிமைகளை மீட்டுக் கொள்வதற்காகவும் குரல்கொடுக்கின்றன உனது கவிதைகள்.

சில நேரங்களில் சமூகத்தின் அதிகாரங்களும் சலுகைகளும் அச்சங்களாகவும் வேதனைகளாகவும் போய்விடக் கூடாது என்பதில் நீ...

"ராஜினி உன்னிடம் என்ன குற்றம் கண்டனர்" கவிதையில்.

,"பெண்ணென்று நீ முடங்கி இருக்கவில்லை
உண்டு உறங்கி வாழ்வை வெறுக்கவில்லை
எமது கரங்களை இறுகப் பற்றி
ஒளியைக் காட்ட விரைந்து நின்றாய்"

எனப் போரால் இனம் விழுகிற போது தோள் கொடுக்கின்றாய்

விடுதலைப் போராட்ட காலத்தில் ஒரு தனிமனித மரணம் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமாக இருந்தால் அது பற்றிய பாதிப்பு ஒவ்வொரு தனிமனிதரிடமும் கேள்விகளையும் குழப்பங்களையும் பிரதிபலிக்கும். அந்த வகையில் பெண்களுக்காக எமது சமூகத்தில் தலைமைத்துவ உணர்வுகள் கொண்டிருந்த ராஜினியைப் பற்றியும் விஜிதரனைப் பற்றியும் ஔவை உனது உணர்வுகள் உண்மையின் கொடூரத்தையும் கசப்பையும் வெளிக்காட்டுவதில் வெடிகுண்டைப்போல் வெளிக்கிளம்புகின்றன; போர் பற்றிய கேள்வியும், போராட்ட அவதிகளும் வாழ்கையின் சோகமும், நிச்சயமற்ற நிலையும் குண்டிலிருந்து பாயும் இரும்புச் சிதறல்கள் போல் உமது கவிதைகளில் ரணங்களாகவும் ஓலங்களாகவும் பதிவு செய்துள்ளாய்.

படிப்பகம்

www.padippakam.com

ஔவை உன்னால் மட்டும் எப்படி முடிகிறது.

"துவக்கும் இரும்பும்
ஆளும் தேசத்தில்
எமக்கேன் புலன்கள்
எல்லாம் அடங்கட்டும்"

என்று சொல்வதற்கு?

எவ்வளவு ஆண்டுகளாக சோதனைகளும் இழப்புக்களும் துயரங்களும் அவமானங்களும் காலம் காலமாக யாழ் மண்ணில் யுத்த தாண்டவம் உக்கிரம் பெற்ற வேளையில், உனது இருப்புப் பற்றிய கேள்வி உன்னுள் கனத்த போதும், நீ நேசித்த இல்லை சுவாசித்த உணர்வுகள் என்னையும் உலுக்குகிறது.

"வீழ்ந்து புரண்டு
அழுத போதெல்லாம்
தன் மடியில் இருத்தி
எனை அணைத்த மண்கூட
வழி தேடும் எனக்கு
புதை குழியைக் காட்டும்"

என எல்லை கடத்தல் கவிதையில் சொல்லும் போது மரணபயம் எனக்கும் புதைகுழியைக் காட்டுகின்றது. போர்க்கால சிந்தனையில் மரத்துப்போன எமது மண்டையில் "என்னுடைய சிறியமலர்" கவிதையில்.

சூழவுள்ள உலகம் முழுவதும்
விறைத்துப் போன ஆண்குறிகளாய்
அச்சம் தருவதை
எப்படித் தவிர்ப்பேன்......?

என நீ தாயாக இருந்து பயப்படுவது நியாயம். பெண்குழந்தைகள் அனேகம் பேர் எமது சமூகத்தில் ஆண் குறிகளால் துளையிடப்பட்டு கருகிப் போவதைக் காணும், கேட்கும், உணர்வுள்ள ஒரு தாய் இப்படி அச்சம் கொள்வது உனது கவிதைக்கு வெளியில் இருந்து பார்க்கும் எனக்கும் அச்சம் தருகின்றது. நானும்தான் கேட்கின்றேன் இதனை எப்படித் தவிர்ப்போம்?

படிப்பகம்

www.padippakam.com

ஔவை போராட்டத்தின் கொடுமையால் எமது நாடு துடிக்கின்றது. குருதிக்கலன்கள் வெடித்துச் சிதறுகின்றன.

"என் மழலைகளை விடு,
நாளைய உலகம்
அவர்களுக்காய் மலரட்டும்"

என நீ தாயாக மன்றாடுவதும் கெஞ்சுவதும், அரசு, அரசாங்கம், சுதந்திரம், உரிமை, பாராளுமன்றம், என்றெல்லாம் பேசும் எவரின் காதிலும் விழப்போவதில்லை. அவையெல்லாம் எமது மனங்களிலும் வாழ்விலும் எந்தவித மாற்றங்களையும் உருவாக்காத வெறும் வார்த்தைகள்.

அரசியலும் ஆக்கிரமிப்பும் போராட்டங்களும் நிறைந்துள்ள இடங்களில், நித்திய நிகழ்வு அவலங்களும், இழப்புக்களும், துயரங்களும், நம்பிக்கையீனங்களும், அவமானங்களும், அச்சங்களும்,.. இவைதான் உமது கவிதைகள்.

அன்று தொடக்கம் இன்று வரையிலும் மனித வாழ்க்கைதான் இலக்கியத்திற்குப் பொருளாக்கப்பட்டது. வாழ்க்கை பற்றிய மனப்பதிவு இலக்கியங்களில் புலப்படுவது யதார்த்தம், இது காலத்தின் தேவை கருதிய ஒன்று.

உமது கவிதைகள் எண்ணிக்கை அதிகம் இல்லாவிட்டாலும் என்னுள் ஏற்படுத்தியிருக்கும் அழுத்தம் எழுதிவிட முடியாது.

மங்கை அக்காவும், உனது கவிதைகளை வாசிக்கத் தந்த எனது வாசுகி அக்காவும், நீயும். இந்தச் சின்னச் சிறிய உலகத்துக்குள் துணிச்சலாக.......... நாடகம், ஓவியம், கவிதை.......என,

எனது வாழ்தல் அகல விரிகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

தோழி (இணைய சஞ்சிகையிலிருந்து)

> "பெண்ணின் பெருமை(?) பேசும் இதே இந்தியாவில் தான் பெண்ணடிமைத்தனமும், பெண்களுக்கெதிரான வன்முறையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன என்றாலும், பாலியல் பலாத்காரம், வரதட்சணைக் கொடுமை போன்றவையும் அதிர்ச்சியளிக்கக் கூடிய எண்ணிக்கையில் அதிகரித்து வருகின்றன. இந்தியாவில் ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை ஒரு பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார் என்று இந்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது."
>
> நன்றி : *தோழி* (இணைய சஞ்சிகை)
>
> பெண்கள் தின சிறப்பிதழ் 2000

இப்படித் தீர்ப்பாகும் என, அந்தக் குற்றவாளிகள் யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். 40 பேரும் பண, பதவி அதிகாரம் படைத்தவர்கள் நமது சட்டத்தின் ஓட்டைகளையும், சட்டவியலாளர்களின் பலவீனங்களையும் நன்கு அறிந்தவர்கள். சம்பந்தப்பட்டவர்களைச் சரிக்கட்ட அவர்களுக்க எத்தனையோ வழிகள் இருந்திருக்கின்றது. இத்துடன் பாதிக்கப்பட்டவர் ஒரு பெண், கூடவே ஏழை. இவ்வளவு சாதகங்கள் இருந்தும் கூட நான்கு வருடங்களுக்குப் பின் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர்.

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்திலிருக்கும் சூரியநெல்லியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியைக் கடத்திக் கொண்டுபோய் 15 இடங்களில் 40 பேர் 42 நாட்கள் வைத்துத் தொடர்ச்சியாகப் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தியிருக்கின்றார்கள். முன்னர் பள்ளியில் ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த அந்தச் சிறுமியை ஒரு பேருந்து நடத்துனர் கடத்திக் கொண்டுபோய் உஷா என்ற பெண்ணிடம் ஒப்படைக்க அதற்கப்புறம் 40 பேரிடம் இந்தச் சிறுமி கைமாறி இருக்கின்றார். இது நடந்தது ஜனவரி 1996.

படிப்பகம்

www.padippakam.com

சூரியநெல்லி கிராமத்தில் தபால்காரராக பணிபுரிகின்றார் அந்தச் சிறுமியின் அப்பா. அம்மா நர்ஸ். தன் மகளுக்க ஏற்பட்ட இந்தக் கொடூரம், பத்திரிகைகளின் ஏதாவது ஒரு மூலையில் அமுங்கிப் போகும் சாதாரண செய்தியாகி விடக்கூடாது என்பதற்காகத் தங்களுக்கு வந்த எத்தனையோ எதிர்ப்புக்களையும் மிரட்டல்களையும் மீறி நான்கு வருடங்களாகப் போராடியிருக்கின்றனர் இந்தப் பெற்றோர்.

பாலியல் பாலாத்காரத்திற்கென்று தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது இது தான் முதல் முறை. சுமார் இரண்டரை வருடங்கள் சிறப்பு விசாரணை நடைபெற்றது: தனி நீதிமன்றத்தின் சிறப்பு நீதிபதியான சஷீதரன் நம்பியார் 317 நாட்கள் விசாரணை நடத்தினார். இறுதியாக கடந்த செப்டம்பர் மாதம் குற்றவாளிகள் 35 பேரும் தண்டிக்கப்பட்டனர். இதில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்பட்ட உஷா உள்ளிட்ட 9 பேருக்கு 13 வருடங்கள் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும் 4.20 லட்ச அபராதத் தொகை பாதிக்கப்பட்ட சிறுமிக்குக் கொடுக்கப்படும் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. “எங்கள் மகளுக்காக மட்டும் நாங்கள் போராடவில்லை, இனி இந்தக் கொடூரம் எந்தப் பெண்ணுக்குமே நடக்கக் கூடாது”என்று சொல்லியிருககும் அந்தச் சிறுமியின் பெற்றோர் இந்த நான்கு வருடப் போராட்டத்தில் உடலும் மனதும் பாதிக்கப்பட்ட நிலையில் சோர்வடைந்து போய் விட்டனர் என்றாலும் இன்று பரவலாகி வரும் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படும் பெண்களுக்க ஒரு தைரிய முன்னுதாரணமாய் இந்தக் குடும்பம் இருக்கும்.

வழக்கமாகப் பாலியல் பலாத்காரம் என்றால் யாருமே அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. குறிப்பாகப் பத்திரிகைகள். ஆனால் சூரிநெல்லி சம்பவம் மக்களின் பார்வைக்கு வந்ததற்கும் பத்திரிகைகள் அதை பரவலாக செய்தியாக்கியதற்கும் காரணம், அந்தச் சிறுமி குற்றவாளிகளாகக் கை காட்டியவர்களில் பெரும்பாலானோர் முக்கிய பொறுப்பில் இருக்கும் உள்ளூர் அரசியல்வாதிகள். அதிலும் குற்றம் சுமத்தப்பட்ட முன்னாள் மத்திய அமைச்சர் பேரா.பி.ஜே.குரியன் சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்ததற்கு முக்கிய காரணம் இந்தச் சம்பவம்தான். தற்போது இவர் உச்ச நீதிமன்றத்தின் தடையுத்தரவு வாங்கியிருப்பதால் அவரின் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

40 பேரால் மிருகத்தனமான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட அந்தச் சிறுமி 15 நாட்கள் கழித்து வீடு திரும்பிய போது அவளின் உடல் காயங்களும், நோய்களும் அதிகமாக இருந்ததோடு தனக்கு ஏற்பட்ட மரண அவஸ்தையினால் மனரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தாள். புகார் கொடுப்பதற்காக காவல் நிலையத்திற்குச் சென்ற போது எங்கும் போல், எப்பொழுதும் போல் இது பெரிய இடத்து விவகாரம் என்று புகாரை திரும்பப் பெறச் சொல்லி மிரட்டியிருக்கின்றனர் காவல்துறையினர். அந்த மூன்று காவல்களும் தற்பொழுது வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தன் மகளுக்கு ஏற்பட்ட கொடுமை தாங்காமல் புகார் கொடுக்கப் போவதாகச் சொன்ன போது, உறவினர்களும் நண்பர்களும் இது வேண்டாத வேலை என்று அறிவுறுத்தி ஒதுங்கிக் கொண்டார்கள். தனியாக விடப்பட்ட நிலையில் மூன்று பேரும் தற்கொலை செய்து கொள்ளக் கூட முயற்சித்ததாக அந்தப் பெற்றோர் சொல்லியிருக்கின்றனர். நான்கு வருடங்களாகப் பாதுகாப்புக் கருதி அந்தச் சிறுமி வெளியே எங்கும் செல்லவில்லை. எந்நேரமும் கூடவே காவல்கள். எந்தவித வெளியுறவும் நட்பும் இல்லாமல் அடைபட்டுக் கிடந்த அந்தச் சிறுமிக்கு தனி நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஓரளவிற்காயினும் தெம்பை அளித்தால் அதுவே போதும்.

பெண்ணின் பெருமை(?) பேசும் இதே இந்தியாவில் தான் பெண்ணடிமைத்தனமும், பெண்களுக்கெதிரான வன்முறையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன என்றாலும், பாலியல் பலாத்காரம், வரதட்சணைக் கொடுமை போன்றவையும் அதிர்ச்சியளிக்கக் கூடிய எண்ணிக்கையில் அதிகரித்து வருகின்றன. இந்தியாவில் ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை ஒரு பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார் என்று இந்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இங்கு மட்டுமல்ல உலகம் முழுவதும் பரவலாகப் பெண்கள் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் துன்புறுத்தப்படுகின்றனர். அதிலும் போர்க்களங்களில் எதிரியின் மேலிருக்கும் பகைமையையும் வஞ்சத்தையும் தீர்த்துக் கொள்ளப் பெண்களே கடுமையான பலாத்காரத்திற்கு உட்படுத்தப் படுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

1919 இல் கொசாக்குகள் யூதர்களையும், இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானியர்கள் ஆயிரக்கணக்கான கொரிய, இந்தோனேசிய, சீனப் பெண்களையும் வியட்நாம் போரின்போது அமெரிக்க சிப்பாய்கள் ஆயிரக்கணக்கான வியட்நாமியர்களையும் பாலியல் பாலாத்காரம் செய்தனர். இந்தியாவைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட எல்லா நல அமைப்புக்களும் தங்கள் புள்ளி விபரக் குறிப்பில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் அவல நிலையைச் சுட்டிக் காட்டியுள்ளன.ஏதோ பெண்கள் அமைப்புக்கள் எல்லாம் வேலையே இல்லாமல் உரிமை, அது, இது என்று உளறிக்கொண்டிருக்கின்றனர். பெண்கள் நடத்தும் எந்தக் கருத்தரங்கமோ, ஆர்ப்பாட்டமோ 'அழகிப் போட்டி' அளவிற்குக் கவனத்தை ஈர்க்காததன் காரணம் பெண் என்பவள் வெறும் உடலாகவே பார்க்கப்படுகிறாள் என்ற ஒரே காரணம்தான்.

——

பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் சட்ட நடவடிக்கைகள் முக்கியமானவை. இந்தியாவில் நடைபெற்ற மேற்குறிப்பிட்ட சம்பவமும் அதைத் தொடர்ந்த நடவடிக்கைளையும் பொருத்தப்பாடு காரணமாக இங்கு தருகிறேன்.

ஆசிரியர்.

காகிதங்களுடனோ அவை இல்லாமலோ
கதைப்போம் நாங்கள்
காலணிகளுடனோ அவை இல்லாமலோ
அணியாய் நடப்போம்
எல்லைகள் அற்றது எங்களின் போராட்டம்
எனவேயுன் சகோதரி கையினைப் பற்று
இதயங்களை உலுப்பும் எங்களின் பாடல்
மாற்றம் ஒன்றுக்கு கனிந்தது காலம்

உலகப் பெண்கள் அணிவகுப்பு - 2000
கருப்பாடலில் இருந்து...
ஆங்கிலம் வழி தமிழில் : சி.ஜெயசங்கர்

படிப்பகம்

www.padippakam.com

பாலநிலைக் கருத்தியலும் பெண்களுக்கெதிரான வன்முறையும்

க.கமலினி

பெண்களுக்கெதிரான வன்முறையானது, தோட்டப்புறங்களில், மனைவியை அடித்தல்,பிள்ளைகளை அடித்தல், தங்கையை அடித்தல், பாலியல் வன்முறை, பாலியல் தொல்லை போன்ற வடிவங்களை எடுக்கின்றது. அவை குடியுடன் மிகவும் தொடர்புடையன. ஆண்கள் குடித்துவிட்டு வன்முறை புரிவது வீட்டுவன்முறையுடனும் (Domestic violence) வீட்டுக்கு வெளியில் நடைபெறும் வன்முறையுடனும் இணைந்த ஒரு தோற்றப்பாடாகும். மறைமுகமான வன்முறைகளும் பல வகைகளில் காணப்படுகின்றன. பாதைகளிலும், பஸ்களிலும் பெண்களைக் கிண்டல் பண்ணுதல், வழிமறித்து நிற்றல், தூஷண வார்த்தைகளைப் பிரயோகித்தல் போன்றவை இவ்வாறான மறைமுகமான வன்முறைகளுக்கு உதாரணங்களாகும்.

> *பெண்களுக்கெதிரான வன்முறை பற்றியோ, பெண்களது சமத்துவம் பற்றியோ நிகழ்வுகளை ஆற்றும்பொழுது "பெண்களுக்கு என்ன பிரச்சினை இருக்கின்றது" என்றும் போர்தான் பெண்களுக்கெதிரன வன்முறைகளுக்குக் காரணம் என்றும், பெண்ணிலைவாதிகளே பிரச்சினைகளை உருவாக்குகின்றார்கள் என்றும் சமூகத்தில் சிலர் மேலோட்டமாக கருத்துக்களை முன்வைப்பதை நாம் அனுபவித்திருக்கின்றோம். ஆனால் கலாசார ரீதியாக தனித்துவங்களை, தமக்குரிய மதிப்பை, பெருமையைக் கொண்டிருக்கும் எல்லா சமூகங்களுமே பெண்களைப் (பெண் என்ற காரணத்தால்) வன்முறைக்குட்படுத்தும் கலாசாரத்தில் மட்டும் பொதுத்தன்மையைக் கொண்டிருக்கின்றன. (கடந்த பெண் சஞ்சிகைகளில் வெளியாகிய பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றி கட்டுரைகள் அதைக் காட்டுகின்றன).*
>
> *குடும்பத்தைப் பொருளாதார ரீதியாகத் தாங்குவோர் என்கிற காரணத்தாலேயே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆண்கள் உயர்வானவர்களாகக் கருதப்படுகின்றார்கள். ஆயினும், குடும்ப வேலைகளுடன், நாட்டினதும், வீட்டினதும் பொருளாதார அபிவிருத்தியில் கடுமையாகப் பங்கு வகித்துக் கொண்டிருக்கும் மலையகப் பெண்களும் வன்முறைகளில் இருந்து மீளவில்லை. இங்கு பிரசுரமாகும் கட்டுரை இதனை ஆராய்கின்றது.*
>
> *- ஆசிரியர் -*

படிப்பகம்

www.padippakam.com

பெண்களிற்கெதிரான வன்முறையானது கருத்தியலுடன் மிகவும் தொடர்புடைய விடயமாகும்.

அதாவது ஆண் வல்லவன், வீரம் மிக்கவன், மேலானவன், அவனது பாலியல் உணர்வுகள் அணை போட முடியாதவை போன்ற கருத்துக்கள் ஒருபுறம் செயற்படுகின்றன. பெண் மென்மையானவள், வல்லமையற்றவள், சகிப்புத்தன்மை உள்ளவள், உணர்வுகளை அடக்க வேண்டியவள் போன்ற கருத்துக்கள் மறுபுறம் செயற்படுகின்றது. இக் கருத்துகள்தான் சமூகத்தில் பால்நிலைக் கருத்தியலுடன் இணைந்து சமூகத்தை இயக்கி வருகின்றன. அவை ஒரு புறத்தில் பாலியல் வன்முறைகளைத் தூண்டும் காரணிகளாக அமைவதுடன் மறுபுறத்தில் பாலியல் வன்முறைக்கு எதிராக செயற்பட முடியாது பெண்களைப் பதுமையாகப் பேணுவதற்கும் உதவுகின்றன.

பெண்களுக்கெதிரான வன்முறையானது பெண்களுடைய உடலையும் உள்ளத்தையும் பாதிப்பதுடன் பெண்களை அபிவிருத்தித் திட்டங்களில் பங்குபற்ற முடியாது தடையை ஏற்படுத்தும் காரணியாகவும் தொழிற்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட தோட்டத்தில் ஒரு பிரிவில் நாங்கள் மேற்கொண்ட ஆய்வின் ஊடாக பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பாக பின்வரும் விடயங்களைத் தொகுத்துக் கூறக்கூடியதாக உள்ளது.

பெண்களுடைய கல்வி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களைப் பற்றிக் கதைத்த போது பெண்கள் தனியே வெளியே செல்வது சிரமம், அது பிரச்சினைக்குரியது போன்ற கருத்துக்கள் வெளிப்பட்டன. பெண்களை, ஆண்கள் வம்புக்கிழுப்பது, கடிதம் கொடுப்பது, தங்களைக் காதலிக்குமாறு கட்டாயப்படுத்துவது, காதலித்து ஏமாற்றுவது, தூஷண வார்த்தைகளைப் பிரயோகிப்பது, பெண்களின் அங்கங்களை வர்ணிப்பது, பாட்டுப்பாடுவது, கூக்காட்டுவது, விசிலடிப்பது, 'ஆற்றிற்கு வாறியா' எனக் கேட்பது போன்றன தோட்டப்புறங்களில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகும். இவ்வாறான காரணங்களினால் பெண்களைப் பெற்றோர் வெளியே அனுப்பப் பயப்படுவதாகக் குறிப்பிட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com

இவ்விடயத்தை ஆராய்ந்து பார்க்கும் போது நாங்கள் இணைத்துச் சிந்திக்கக் கூடியதாக இருந்தது, அதாவது பெண்களை கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என இயங்கும் கருத்தியலிற்கும் அதுசார்ந்து பெண்களை 'பாதுகாப்பாக', கட்டுப்பாடாக வளர்க்கும் நடைமுறைக்கும் இவ்வாறான வன்முறைகளிற்குமான தொடர்பை மக்கள் ஏற்படுத்துவதை நாங்கள் அவதானித்தோம். பெண்களைக் கட்டுப்பாடாக வளர்த்தல், பெண்கள் வயதிற்கு வந்ததும் தமது நடத்தைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் எனும் விடயங்கள் பற்றிக் கதைத்த போதுதான் மக்கள் இவ்விடயங்களை வன்முறைகளுடன் தொடர்புபடுத்துவதை அறிந்தோம்.

மக்களின் நடத்தை, மனப்பாங்கு பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள் பற்றிப் பேசியபோது மக்கள் இவ்வாறு வன்முறைகளை உதாரணம் காட்டினர். அவர்கள் ஏற்படுத்தும் இந்தத் தொடர்பை கோட்பாட்டாக்கம் செய்து சிந்திப்பது அவசியம் எனக் கருதினோம்.

பெண்கள் கட்டுப்பாடாக இருந்தால் வன்முறை நிகழாது. என மக்கள் கொண்டுள்ள கருத்தியல் மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டிய ஒன்றாக எமக்குப் பட்டது.

அது சார்ந்து இக் கட்டுரையை எழுதத் தீர்மானித்தோம். அதுசார்ந்து தகவல்கள் சிலவற்றைத் திரட்டினோம்.அவற்றை இங்கு தொகுத்துத் தருகின்றோம். இந்தப் பிரிவில் (Division) 'X' என்ற ஒரு 21 வயது ஆண்பிள்ளை இருக்கின்றார்.இவர் O/L வரைப் படித்திருக்கின்றார். அழகானவர். மரக்கறி தோட்டங்களைக் குத்தகைக்கு எடுத்து செய்கைபண்ணுதல், வியாபாரம் செய்தல் போன்றவை இவரின் தொழிலாகும். இவர் பெண்களிடம் சேட்டை புரிபவர் எனப் பெயர் பெற்றவர். பெண்களிற்குக் காதல் கடிதம் கொடுப்பது, காட் கொடுப்பது, காட்டை தபாலில் அனுப்புவது, பெண்களைச் சுற்றித் திரிவது, அவர்கள் விரும்பாவிட்டால் அவர்களைப் பற்றி தவறான தகவல்களைப் பரப்புவது போன்ற வேலைகளில் இவர் ஈடுபடுகின்றார். இவர் ஒரு பெண்ணைக் கட்டாயப்படுத்தியதால் அந்தப் பெண்ணின் தாயார் அப்பெண்ணை உடனடியாக அருகில் உள்ள எஸ்ரேற் ஒன்றில் வேலை செய்யும் ஊழியர் ஒருவருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட்டார். அதன்பின் இந்த இளைஞர் அந்த எஸ்ரேற்றிகுச் சென்று அப்பெண்ணின் மாப்பிள்ளையுடனும் மாப்பிள்ளையின் உறவினர்களுடனும் அப் பெண்ணைப் பற்றி தவறாகக் கதைபரப்பி வருகின்றார்.

படிப்பகம்

www.padippakam.com

இவருக்குப் பயந்து சில பெண்கள் வீட்டை விட்டு வருவதில்லை.

இவற்றைக் காரணமாகக் கூறிப் பெண்களைக் குறைந்த வயதில் திருமணம் செய்து வைக்கின்றனர். இவற்றைக் காரணம் காட்டி பெண்களைக் கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்கின்றனர். ஆண்கள் எப்படியும் இருப்பார்கள். பெண்கள்தான் கவனமாக இருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர்.

இன்னொரு பெண் நகரத்தில் தையல்காரராக வேலை செய்யும் இளைஞர் ஒருவரை விரும்பி இருக்கின்றார் இந்த ஆணும் பல பெண்களை ஏமாற்றியவர் என்று சொல்லப்படுகின்ற அழகானவர். இவர் இக் குறிப்பிட்ட பெண்ணின் வீட்டிற்கு வந்து வீட்டைப் பூட்டி உள்ளே இருந்ததைக் கண்டு பெண்ணின் தகப்பனார் ஏசியதால் இப் பெண் வானொலி, தொலைக்காட்சி பாவிக்கும் பற்றரியிலிருந்து அமிலத்தை அருந்தியதால் மிகவும்ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இப்பொழுது தப்பிப் பிழைத்து ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டிற்கு வந்திருக்கின்றார்.

இந்தக் காரணங்களால்தான் தோட்டத்தில் இருக்கும் வயதானவர்கள் 'உலகம் கெட்டுக் கிடக்கின்றது' பெண்கள் கட்டுப்பாடாக இருக்க வேண்டும் போன்ற அறிவுறுத்தல்களைச் செய்கின்றனர். பெண்கள் வயதிற்கு வந்ததும் கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்று பொதுவாக எதிர்பார்க்கப் படுகின்றனர். முன்னரெல்லாம் பெண்களை பாடசாலையால் நிறுத்தும் வழக்கமும் இருந்தது. தற்போது நிலைமை மாறி வருகின்றது. பெண்களைக் கல்வி கற்பதற்கு பெற்றோர் அனுப்பிவைக்கின்றார்கள், பெண்களைப் படிக்கவைக்கின்றார்கள், என்ற கருத்திற்கு புள்ளிவிபரங்களும் சான்று பகர்கின்றன. இக் குறிப்பிட்ட பிரிவில் தொழிலாளியின் பிள்ளை ஒருவர் வாகன சாரதியின் பிள்ளைகள் இருவர் என 03 பெண்கள் A/L வரை படித்திருக்கின்றார்கள். O/L வரை படித்தபெண்களும் சிலர் இருக்கின்றனர். இவ்வாறு நிலைமைகள் மாறி வந்தாலும் பாடசாலைக்குப் போகாத பெண்களும் பலர் இருக்கின்றனர். O/L எடுத்த பெண் பிள்ளைகளில் A/L செய்வதற்கு தகுதியானவர்கள் படிப்பைத் தொடராது நிறுத்தியுள்ளனர். பஸ்சில் போய்வர வேண்டும், பெண் பிள்ளைகளுக்கு போக்குவரத்துக் கடினம், "உலகம் கெட்டுக் கிடக்கின்றது", வீட்டில் வறுமை போன்ற காரணங்களின்னால் A/L செய்வதற்கு பெண்களை பாடசாலைக்கு அனுப்பி வைக்க பெற்றோர் விரும்புவதில்லை. பிள்ளைகளும் விரும்புகின்றார்கள் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் தனியே வெளியில் போவது சிரமம், ஏதாவது நடந்தால் பிரச்சினை எனக் கருதும் பெற்றோர் குறைந்த வயதிலேயே பெண்களிற்கு கலியாணம் செய்து வைத்து விடுகின்றார்கள். இவ்வாறு மேற்படிப்புப் படிக்காமல் வீட்டில் மறித்து வைப்பதால் அவர்கள் முன்னேற வாய்ப்பில்லாமல் போகின்றது.

கல்யாணம் செய்த பெண்கள் கணவனுடன் மட்டும்தான் வெளியே போகவேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றனர். கல்யாணம் செய்த பெண் தனியாக வெளியே போவதை சமூகம் விரும்புவதில்லை. ஒருபுறம் ஆண்களின் வன்முறையை எதிர்நோக்கும் பெண்கள் மறுபுறத்தில் வீட்டில் கட்டுப்பாடினை எதிர்நோக்குகின்றனர். தோட்டத்தினுள் நடமாடுவதற்கு அதிக கட்டுப்பாட்டினை விதிக்காதவர்கள், தோட்டத்திற்கு வெளியே போவதற்கு அதிக கட்டுப்பாட்டினை விதிக்கின்றனர்.

கடைகளிற்கு அல்லது வேறு ஏதாவது தேவைகளிற்கு பெண்கள் குறிப்பாக கணவன் வீட்டில் இருக்கின்ற போது, பெண் தனியாக வெளியே செல்வதை சமூகம் விரும்புவதில்லை. அவ்வாறு செல்பவர்கள் "இன்னொரு ஆள்பார்க்கப் போகின்றார்" என எல்லோரும் கூறுவார்களாம். அல்லது குறிப்பிட்ட பெண் ஆணுடைய வேலைகளைச் செய்பவளாகக் கருதப்படுவாள். கணவன் கொழும்பில் அல்லது வெளியிடங்களில் இருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே பெண்கள் தனியாகக் கடைக்குப் போவார்கள் அவளைச் சமூகம் ஆணுடைய வேலைகளைச் செய்பவளாகக் கருதும். "ஆம்பிள மாதிரி" எனக் கூறுவார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

கணவனை இழந்த பெண்கள் வயதானவர்களாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வெளியிடங்களுக்கு இன்னொரு சிறு பிள்ளையையும் துணைக்குக் கூட்டிக்கொண்டு செல்வார்கள். கொழும்பில் அல்லது வெளிநாட்டில் வேலைசெய்யும் பெண்கள் கல்யாணமானவர்களாக இருக்கும் சந்தர்ப்பத்தில் (நடுத்தர வயது) கடைகளுக்குப் போகும்போது இருவராகச் சேர்ந்துபோவதுண்டு. ஆனால் சிறுவயதில் ஆணின் துணையுடன்தான் போவார்கள் பெண்பிள்ளைகள் பாடசாலைக்குப் போகும் போது கூட்டமாக அல்லது இருவராகப் போவதைக் காணலாம். தோட்டங்களில் வேலைசெய்யும் இளம் பெண்கள் கூட அதிகம் பேசாதவர்களாக தங்களுடைய வேலையில் மட்டும் கவனம் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். கலியாணமான நடுத்தர வயதுப் பெண்கள் நன்றாகக் கதைப்பார்கள் ஆட்களைக் கிண்டல் பண்ணுவார்கள். இளம்பெண்கள் அவ்வாறு செய்ய முடியாது.

வேலை செய்யும் இடங்களிலும் பெண்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். தோட்ட நிர்வாகி, உதவி நிர்வாகி, மேலாளர் என்பவர்களுள் பெண்களைத் தமது விருப்பத்துக்குப் பயன்படுத்தக் கூடியவர்களும் இருக்கின்றனர். பெண்களும் பல நன்மைகள் தமக்குக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் அவ்வாறு பழகுகின்றனர். இவ்வாறான அலுவலர்களது விருப்பத்தை அவர்கள் மறுக்கமுடியாது என்ற காரணத்தினாலும் பலர் இணங்குகின்றனர். பல அலுவலர்கள் பெண்களுடன் பிரச்சினை என்பதால் அடிக்கடி மாற்றம் வாங்குகின்றனர். இந்தத் தோட்டத்திலும் அவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான பிரச்சினைகள் பற்றி எல்லோரும் அறிந்திருப்பார்கள் அதை விடுப்பு மாதிரி எல்லோருக்கும் சொல்வார்கள். பாதிக்கப்பட்ட பெண் மீண்டும் சமூகத்தில் கௌரவமாக வாழ முடியாத வகையில் அவ்விடயத்தையே திரும்பவும் திரும்பவும் கதைக்கும் வழக்கம் எல்லோருக்கும் உண்டு. தோட்டம் என்பது தனிப்பட்ட உறவுகளாயினும் சரி சமூக உறவுகளாயினும் சரி குறித்த எல்லைகளைக் கொண்ட ஒரு நிறுவனமாகத் தொழிற்படுகின்றது. எல்லோரும் எல்லோருக்கும் தெரிந்தவர்களாக இருக்கின்றனர். வாழும் இடத்திலும் வேலை செய்யும் இடத்திலும் ஒரே ஆட்களைச் சந்திக்க வேண்டியதாக இருக்கின்றது. அவ்வகையில் சுற்றிச் சுற்றி அதே வாழ்கை, அதே ஆட்கள் என்பதால் பாதிக்கப்பட்டும் பெண்கள் சமூகத்தை எதிர்கொள்வது கடினமாக உள்ளது

படிப்பகம்

www.padippakam.com

அலுவலகர்கள் (ஆண்கள்) பொதுவாக வெளியிடங்களில் இருந்து இங்கு வந்து தங்கியிருந்து வேலை செய்பவர்களாகவும், கூடுதலானவர்கள் தமது குடும்பங்களைப் பிரிந்து பலகாலம் தொடர்ந்து தோட்டத்தில் தங்கியிருக்கின்றனர். அவ்வாறானவர்கள் தமது பாலியல் தேவைகளைத் தகாத முறையில் தீர்த்துக் கொள்ள முயல்கின்றனர். அல்லது நிறைவு செய்துகொள்ள முயல்கின்றனர். தோட்டப்புறங்களில் வேலையின் தன்மையும் இவ்வாறான பிரச்சினைக்குத் துணைபோகும் காரணியாக அமைகின்றது.

தொழிற்படிமுறை அமைப்பில் ஆண்கள் மேலானவர்களாக(Superiors) இருப்பதையும் பெண்கள் அவர்களுக்கு கீழான ஒரு தட்டில் இருப்பதையும் காணலாம். அவ்வகையில் ஆண்களுக்குக் கூடிய அதிகாரம் இருக்கின்றது. ஆண்கள் வேலைத்தளத்தில் வேலை தொடர்பாக இருக்கின்ற அதிகாரத்தை பாலியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்கின்றனர். பெண்களுடைய வேலை எந்நேரமும் ஆண்களால் மேற்பார்வை செய்யப்படுவதாக இருக்கின்றது. இதனால் ஆண்கள் பெண்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடிகின்றது. மேலாளர்கள் (Supervisors) அதிகாரம் உடையவர்களாகவும், பெண்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடியவர்களாகவும் இருப்பதுடன் அவர்களுக்குப் பெண்களுடன் பழகும் வாய்ப்பும் அதிகம் இருப்பதால் தனது அதிகாரத்தைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்கின்ற போக்குக் காணப்படுகின்றது.

ஒவ்வொரு சமூகங்களையும் சேர்ந்த ஒவ்வொரு பெண்ணுமே வீட்டிலோ வீதியிலோ வேலைத் தளத்திலோ ஏதோவொரு வகையில் வன்முறைக்குட்படுத்தப்படக் கூடும் என்ற அச்சத்துடன் இருக்கிறாள்.

படிப்பகம்

www.padippakam.com

குறிப்பிட்ட சமூகம் பெண்களை ஒதுக்கி வைப்பதுடன் பெண்களை மட்டும் பழி சொல்கின்றது. ஆண்கள் மாற்றல் வாங்கிக் கொண்டு தப்பித்துப் போய்விடுகின்றார்கள். காதலும் அன்பும் அதனுடன் இணைந்த பாலியல் உந்துதலும் இளமைவாழ்வில் ஒரு அம்சம் எனநினைத்து துணையொன்றைத் தாமாகத்தேடிக்கொள்ளவிளையும் பெண்களிற்கு ஏமாற்றமும் துயரமுமே விளைகின்றது.

பெண்கள் தமது தாழ்ந்த நிலைமையையும், ஆண்கள் தம்மில் அதிகாரம் செலுத்தும் போக்கினையும் எதிர்க்கும் வகையில் மறுபடி எதிர்த்துக் கதைப்பதுண்டு.அவ்வாறு எதிர்த்துக் கதைக்கின்ற போது மேற்பார்வையாளர்கள் பாலியலுடன் சம்பந்தப்பட்ட வார்த்தைகளைக் கூறி அடக்குவதைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு மேற்பார்வையாளரும், கல்யாணம் செய்த நடுத்தர வயதுப் பெண்களும் வாய்ச்சண்டையில் ஈடுபடுவதைக் காணலாம். அதுபோல கங்காணிகளையும் சமாளிக்கும் வகையில் பெண்கள் எதிர்த்துப் பேசுவது உண்டு. வேலைத்தளத்தில் இருக்கின்ற அதிகார முறைமையை பெண்கள் ஒருமட்டத்தில் எதிர்க்கின்றார்கள் என்பதை இவ்வாறான வாய்ப்பேச்சுக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஒரு பெண்தொழிலாளிக்கும் ஒரு அலுவலகருக்கும் இடையில் உருவாகும் தொடர்பை (பாலியல் ரீதியானது) தோட்டமட்டத்தில் எல்லோரும் உடனடியாக புதினம் மாதிரியாகக் கதைப்பார்கள். புதிதாக வருபவர்களுக்கும் கூறுவார்கள். குறிப்பிட்ட பெண்ணிற்கு நடத்தை தவறியவள் என உடனடியாக முத்திரை குத்திவிடுகின்றனர். சாதாரணமான நல்ல வாழ்க்கைக்கு எதிரிடையான வாழ்க்கையை வாழ்பவளாக இப்பெண் கருதப்படுகின்றாள். மறுபடி ஒரு ஆண் ஏற்று கல்யாணம் பண்ணும் பட்சத்தில் மட்டும் இப்பெண்ணிற்கு மீண்டும் நல்ல வாழ்கையை வாழ்பவள் எனும் பட்டம் கொடுபடும். கல்யாணம் ஆன பெண்ணாக இருக்கும் சந்தர்ப்பங்களில் குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் சமூகம் ஆணைக் குறை கூறுவதில்லை. சரியான பாலியல் நடத்தையை ஆணிடம் எதிர்பார்ப்பதில்லை. மாறாகப் பெண் மீதுதான் குற்றம் சுமத்தப்படுகின்றது.குறிப்பிட்ட பெண்ணை பெற்றோர் அல்லது கணவன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவில்லை என வீட்டில் இருப்பவர்கள் மீதும் பழி சுமத்தப்படும்.

படிப்பகம்

www.padippakam.com

குடும்பங்களிலும் வீடுகளிலும் நிகழும் வன்முறைகள் (Domestic violence) பெரும்பாலும் கணவன் குடித்துவிட்டு மனைவியை அடித்தல், பிள்ளையை அடித்தல், ஆண் சகோதரர்கள் பெண்களை அடித்தல் போன்றவையாக அமைகின்றன. லயன் காம்பராக்கள் சிறிதாக இருத்தல், அதில் பலர் கூட்டுக் குடும்பமாக வாழும் நிலை இருத்தல், என்பவற்றால் தகாத பாலியல் உறவுகள் ஏற்படுகின்றன, ஆண்கள் இவ்வாறான சூழலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். குடும்ப அங்கத்தவர் என்ற வகைப்பாட்டினுள் ஒரு பெண் கணவரின் சகோதரர்கள், தன்னுடைய சகோதரிகளின் கணவன்மார், எனப் பலரின் வன்முறைகளை எதிர்கொள்கின்றனர். கூட்டுக் குடும்பங்கள் சிறிய இடவசதியற்ற வீடுகளில் வாழ்கின்றபோது பெண்கள்தான் அதனால் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர்

. ஒரே வீட்டிலுள்ள குடும்பங்களிற்கிடையில் ஏற்பட்ட சச்சரவினால் கணவனின் சகோதரனினால் தாக்கப்பட்டு ஒரு பெண்ணுக்கு கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது.

இன்னொரு பெண் சகோதரியின் கணவனுடன் ஏற்பட்ட தொடர்பினால் குழந்தை ஒன்றை பெற்றெடுத்துள்ளார்.

இன்னொரு பெண் சகோதரனினால் துன்புறுத்தப்படுகின்றார் என்பதை அறிந்தோம்.அவருடைய கதையை இங்கு கேட்போம்

இவர் பாடசாலைக்குப் போனதில்லை லயத்திலும் யாரும் இவருக்கு எழுதப் படிக்க சொல்லிக் கொடுக்கவில்லை. அம்மா, அப்பா போன்ற சொற்கள் கூட இவருக்கு எழுத வாசிக்கத் தெரியாது.14 வயது மட்டும் வீட்டில் இருந்து வீட்டு வேலைகளைச் செய்து வந்ததுடன் அண்ணன்மாருடைய பிள்ளைகளைக் கவனித்து வந்துள்ளார். இவருக்கு ஏழு சகோதரர்கள் இருக்கின்றனர். இவர் எட்டாவது பிள்ளை. 15 வயதில் இவர் கைக்காசிற்கு வேலைக்குப் போகத் தொடங்கினார். கடந்த இரண்டு வருடங்களாக இவர் கைக்காசிற்கு வேலைக்குச் செல்கின்றார் தகப்பனார் சிறுவயதில் இறந்துவிட்டார். தாயார் தற்போது கொழும்பில் ஒரு வீட்டில் வேலை செய்கின்றார். இவர் தற்போது வசித்துவரும் காம்பராவில் மொத்தமாக 7 பேர் இருக்கின்றார்கள். இந்தக் காம்பரா ஒரு சிறிய விறாந்தையுடன் அமைந்தது. காம்பராவின் பின்னால் குசினியை அமைத்துள்ளனர். இவர்களுக்கு மலசலகூடம் இல்லை. மரக்கறித் தோட்டம் செய்கை பண்ணுவதற்கு இடமும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

வீட்டுக்கு முன்னால் 'பைப்' ஒன்று இருக்கின்றது. வீட்டில் தளபாடங்கள் மிகவும் குறைவு. இவருடைய அண்ணனும் மனைவியும் தோட்டத்தில் நிரந்தர பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்கள். அவர்களிற்கு 2 பிள்ளைகள்.இவரின் இன்னொரு அண்ணனும் இவர்களுடன் இருக்கின்றார்.அவரின் மனைவி உழைப்பதற்காக வெளிநாடு சென்றுவிட்டார் குடும்பத்தில் இவரின் நிலை மோசமான ஒன்றாக இருக்கின்றது. ஏனெனில் இவரை இவரின் அண்ணா நன்றாக அடிப்பாராம்" அம்மா எப்பொழுதும் வெளியிடங்களில் வேலை செய்து வந்ததால் அண்ணாவுடன் தான் நான் சிறுவயதில் வளர்ந்து வந்தேன். அண்ணாதான் சிறுவயதில் இருந்து வளர்த்து வந்தார். அதனால் நான் இப்பொழுது அவரிற்கு கட்டுப்பட்டு வாழவேண்டி உள்ளது. அண்ணா எனது சம்பளத்தை வாங்கிச் செலவு செய்வார். அவர் நன்றாகக் குடிப்பார்.குடிப்பதால் எங்களிற்கு எல்லா இடத்திலும் கடன். எங்கள் மூவரின் (எனது, அண்ணி, அண்ணா) சம்பளத்தையும் அண்ணாதான் வாங்கிவருவார். கடன் கட்ட வேண்டும் என்று கூறி பணத்தை எடுத்துச் செல்வார். ஆனால் கடன்காரர்கள் வீட்டுக்கு வருவார்கள். எப்படிப் பணத்தை செலவுசெய்கிறார் என்று கேட்பதற்க எங்களிற்குப் பயம். அண்ணா வீட்டில் அண்ணியோடும் ஒரே சண்டை பிடிப்பார்.கிடைக்கும் பொருளால் அடிப்பார்கள். அக்கம் பக்கத்தில் எமக்கு 10,000/= கடன் இருக்கின்றது. அண்ணி சம்பளம் வாங்கச் சென்றால் அண்ணா ஏசுவார். நான் இரண்டு வருடங்களாக வேலை செய்தும் இன்னும் ஒரு நகைகூட வாங்கவில்லை.எனது அம்மாதான் கொழும்பில் வேலை செய்த பணத்தில் எனக்கு ஒரு தோடு செய்து கொண்டு கொடுத்தார். அதனையும் அண்ணா அடகுவைத்துவிட்டார். எனக்குப் படிப்பு இல்லாத காரணத்தினால் வேறு வேலையும் செய்ய முடியாது. அம்மாவைப் போல கொழும்பில் வேலை செய்து உழைக்க விருப்பம். ஆனால் அண்ணாவிற்கு என்னை அனுப்ப விருப்பமில்லை. அக்கா ஒருவர் வேறு தோட்டத்தில் இருக்கின்றார். எனக்கு அவர்களுடன் போக விருப்பம். ஆனால் உழைப்புக்காக என்னையும் இங்கு வைத்துள்ளார். அண்ணா என்னை சிறிய வயதில் இருந்து பார்த்ததால் அடிக்கலாம் என்று நினைக்கின்றார். வீட்டில் தூஷணம் கதைப்பது எங்களிற்கு விருப்பமில்லை. குடிப்பழக்கம் இருப்பதால் வீட்டிற்கு சாமான்கள் வாங்கி வசதியாக இருக்க முடியாதுள்ளது

இப்படியாக நீண்டுகொண்டு போகின்றது அவருடைய கதை

படிப்பகம்

www.padippakam.com

பெண்பிள்ளைகள், பெண்கள், தமது வாழ்கை, படிப்பு, குடும்பம், பாலியல் போன்றவற்றை சார்ந்ததான தீர்மானங்களை எடுக்கக்கூடிய வகையில் வளர்க்கப்படுவதோ அல்லது கல்வி கற்பதோ இல்லை. இதற்குக் காரணமாக வறுமையும் பால்நிலைக் கருத்தியலும் (Gender Ideology) இணைந்து செயற்படுகின்றது. பெண்கள் இவ்வாறான தீர்மானங்களை எடுக்கமுடியாதுள்ளதால் அவர்கள் இருக்கின்ற நிலைமைகளிற்கு ஏற்ப பணிந்து போக வேண்டியுள்ளது.

உதாரணமாக பாலியல் தொடர்பான கட்டுப்பாட்டினை பெண்கள் தமது கையில் வைத்திருக்க முடியாதுள்ளது. தமது பாலியல் தேவைகள், தமது விருப்பு வெறுப்பு என்பவற்றை அவர்கள் வெளிப்படுத்த முடியாதுள்ளது. தமது பாலியல் தேவைகளை நிறைவேற்ற முயலும் போது இவர்கள் மேல் தகாத பெயர்கள் சுமத்தப்படுகின்றது. பொருளாதார ரீதியாக, சமூகரீதியாக, உளவியல் ரீதியாகப் பெண்களே பாதிக்கப்படுகின்றனர். சமூகமும் ஆண்களை அவ்வாறுதான் இருப்பார்கள் எனக்கூறி ஆண்களில் பழி சுமத்துவதில்லை. பொறுப்பு வாய்ந்த பாலியல் நடத்தை (responsible sexual behaviour) தொடர்பாக பால்நிலைக் கருத்தியல் சார்ந்து மாற்றங்கள் ஏற்படுவது அவசியமாகும்.

ஆண்கள் தமது உணர்வு வெளிப்பாட்டின் பின் விளைவுகள் தொடர்பாக விழிப்புணர்வினை, பெண்ணிலை நோக்கில் பெற்றுக் கொள்வது அவசியமானதாக இருக்கின்றது. ஆண்கள் கடிதம் கொடுத்தல்

படிப்பகம்

www.padippakam.com

தங்களுடைய விருப்பத்துக்குப் பணியுமாறு பெண்களை வற்புறுத்தல், சுற்றிவரல், கல்யாணத்துக்குப் பின் கதைகளைப் பரப்புதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் பெண்களிற்கு உளவியல் தாக்கம் ஏற்படுவதுடன் சமூக வாழ்கையை அவர்கள் கௌரவமாக வாழ முடியாமல் தடைகளை ஏற்படுத்துகின்றன. இவ்வாறன சந்தர்ப்பத்தில் இதனைச் சமூகப் பிரச்சினையாகக் கொண்டு இவற்றை அணுகுவதற்கு மாறாக, குடும்பத்தவர் பெண்களைக் கட்டுப்படுத்தி வைக்கின்றனர்.



பெண்களைச் சொந்தம் கொண்டாடக் கூடியவர்கள், அடக்கப்படக் கூடியவர்கள், விருப்பத்திற்கு இணங்க வைக்கக் கூடியவர்கள் எனக் கருதுவதால் ஒருபுறத்தில் வெளியாட்கள் அவர்களிற்கு தொல்லை கொடுக்கின்றனர். இவ்வாறான தொல்லைகள் பெண்களிற்கெதிரான வன்முறைகள் ஆகும். மறுபுறத்தில் வீட்டில் உள்ள ஆண்களும் பெரியவர்களும் பெண்கள் தம்மால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என நினைக்கின்றார்கள் ஒருபுறத்தில் பெண்களுடைய பாலியல் தேவைகள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப் படுகின்றன. மறுபுறத்தில் அவை அடக்கி வைக்கப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

பெண்களுக்கெதிரான வன்முறையும் அதன் விளைவாக குடும்பத்தவர் பெண்களை அடக்கி வைக்கின்ற போக்கும் கல்வி, தொழில்வாய்ப்பு அடிப்படை வசதிகள் போன்ற சமூக பொருளாதார காரணிகள் பெண்களைச் சென்றடையாமல் இருக்க வழிவகுக்கின்றன.

பெண்களுடைய உளவியலானது ஒரு புறத்தில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதுடன் மறுபுறத்தில் அடக்கி வைக்கப்படுகின்றது. அவ்வகையில் ஆண்களால் வன்முறைக்குட்படுத்தக் கூடியதான பயம் சார்ந்த ஆளுமை வெளிப்பாட்டை ஒருபுறத்திலும் மறுபுறத்தில் "பாதுகாக்கப்பட வேண்டியதான" ஆளுமை வெளிப்பாட்டையும் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான சமூகக் கட்டமைப்பு, கருத்தியல் உளவியல் தாக்கம் என்பவற்றின் ஊடாக பெண்கள் மீண்டுவருவதென்பதும் பெண்நிலைசார்ந்த ஆளுமையை உருவாக்கிக் கொள்வதென்பதும் கடும் பிரயத்தனத்தின் ஊடாகத்தான் சாத்தியமாகும். அப்பிரயத்தனத்திற்கு பக்கபலமான முறைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

குறிப்பு :- இத் தோட்டம் மலையகத்தில் உயர்விளைச்சல் தரக்கூடிய பிரதேசத்தில் உள்ளது. நகரத்திற்கு அண்மையில் அமையாததால் பின்தங்கிய தோட்டங்களுக்குரிய தன்மைகளைக் கொண்டது. இனத்துவரீதியான இடையூடாட்டத்தைக் குறைவாகக் கொண்டு, பரவலாகத் தமிழ்கள் வாழும் சூழலைக் கொண்டது. இக்காரணங்கள் கட்டுப்பாடுகள், பண்பாட்டு விழுமியங்களைப் பேணல், என்பதில் தாக்கத்தைச் செலுத்துகின்றது.

இவ் ஆய்விற்கு உதவிய "பாம்" நிறுவனத்தினருக்கு நன்றிகள்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

வருடாந்தச் சந்தா - பெண்

ஐரோப்பா, வட அமெரிக்கா,
அவுஸ்திரேலியா : US $ 20/=
இந்தியா : US $ 10/=
இலங்கை : ரூபா 150/=

சந்தா விண்ணப்பம் - 2001

பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்

பெயர் :..

விலாசம் :..

திகதி :..

இத்துடன் காசோலை / காசுக் கட்டளையை சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பெயரில் அனுப்பி வைக்கிறேன்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
46/02, பழையவாடிவீட்டுத் தெரு,
மட்டக்களப்பு
இலங்கை

Suriya Women's Development Centre
No - 46/2, Old Rest House Rd,
Batticaloa.
Srilanka.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ISSN - 1391 - 6122

படிப்பகம்